www.surabooks.com

சுராவின்

வணிகவியல்

மேல்நிலை - முதலாம் ஆண்டு

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறப்பம்சங்கள் :

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள், முதல் பருவ இடைத்தேர்வு – 2018 [Govt. MQP & First Mid- 2018], காலாண்டுத் தேர்வு – 2018, 2019 & 2023 [QY-2018, 2019 & '23]. அரையாண்டுத் தேர்வு – 2018, 2019 & 2023 [HY - 2018, 2019 & '23], அரசு பொதுத் தேர்வு மார்ச் – 2019, 2020, மே – 2022, ஏப்ரல் - '23 & மார்ச் - '24 [Mar. - 2019, 2020 &'24; May - 2022 & April - '23], உடனடித் தேர்வு ஜுன் – 2019, ஆகஸ்ட் – 2022 & ஜுலை 2023 [June - 2019, Aug. - 2022 & July- '23], அரசு துணைத்தேர்வு செப்டம்பர் – 2020 & 2021 [Sep. - 2020 & 2021] , திருப்புதல் பொதுத்தேர்வு – 2022 [CRT - 2022] மற்றும் பொதுத்தேர்வுக்கான முக்கிய வினாக்கள் [BEQ] ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு பொதுத் தேர்வு மார்ச் 2024 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact

80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 78718 02000 / 98409 26027

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG 213

எழுதி வழங்கியவர்
திரு. பூமிநாதன் M.Com., B.Ed., M.Phil.

Our Guides for XI & XII Standard

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

பதிப்பாசிரியர் உரை

11ம் வகுப்பிற்கான சுராவின் **வணிகவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். வணிகவியல் பாடங்களுக்கான வினா விடைகள் / பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் வணிகவியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் வணிகவியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், வணிகவியல் மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

சுபாஷ் ராஜ், B.E., M.S.,
- பதிப்பகத்தார்

வாழ்த்துக்கள் !!!

தலைமை அலுவலகம்
சுரா பப்ளிகேஷன்ஸ்
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
Phones : 044 - 4862 9977, 044 - 4862 7755.
e-mail : orders@surabooks.com
website : www.surabooks.com

For Orders Contact
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
98409 26027

19/07/2024

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

பொருளடக்கம்

அலகு	பாடத் தலைப்புகள்	பக்க எண்	மாதம்
அலகு 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள்	அத்தியாயம் 1 - இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி	1-5	ஜூன்
	அத்தியாயம் 2 - தொழிலின் நோக்கங்கள்	6-10	
	அத்தியாயம் 3 - தொழில் நடவடிக்கைகளின் வகைகள்	11-15	
அலகு 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்	அத்தியாயம் 4 - தனியாள் வணிகம்	16-20	
	அத்தியாயம் 5 - இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை	21-27	
	அத்தியாயம் 6 - கூட்டுப் பங்கு நிறுமம்	28-31	ஜூலை
	அத்தியாயம் 7 - கூட்டுறவு அமைப்பு	32-36	
	அத்தியாயம் 8 - பன்னாட்டு நிறுமங்கள்	37-40	
	அத்தியாயம் 9 - அரசு அமைப்புகள்	41-46	
அலகு 3 சேவைத் தொழில்கள் I	அத்தியாயம் 10 - இந்திய ரிசர்வ் வங்கி	47-51	
	முதல் பருவத் தேர்வு (ஜூன், ஜூலை)		
	அத்தியாயம் 11 - வங்கிகளின் வகைகள்	52-55	ஆகஸ்ட்
	அத்தியாயம் 12 - வணிக வங்கிகளின் பணிகள்	56-61	
	அத்தியாயம் 13 - பண்டகக் காப்பு	62-66	
	அத்தியாயம் 14 - போக்குவரத்து	67-70	
	அத்தியாயம் 15 - காப்பீடு	71-75	
அலகு 4 சேவைத் தொழில்கள் II	அத்தியாயம் 16 - இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்	76-82	செப்டம்பர்
அலகு 5 சேவைத் தொழில்கள் III	அத்தியாயம் 17 - தொழிலின் சமூக பொறுப்புணர்வுகள்	83-88	
	அத்தியாயம் 18 - தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை	89-93	
அலகு 6 தொழில் நிதியியல்	அத்தியாயம் 19 - தொழில் நிதிமூலங்கள்	94-101	
	அத்தியாயம் 20 - பன்னாட்டு நிதி	102-106	
காலாண்டுத் தேர்வு (ஜூன் - செப்டம்பர்)			

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

அலகு 6 தொழில் நிதியியல்	**அத்தியாயம் 21** - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்	107-112	**அக்டோபர்**
அலகு 7 வியாபாரம்	**அத்தியாயம் 22** - வியாபாரத்தின் வகைகள்	113-117	
	அத்தியாயம் 23 - வழங்கல் வழிகள்	118-123	
	அத்தியாயம் 24 - சில்லறை வியாபாரம் செய்தல்	124-130	
அலகு 8 பன்னாட்டு வணிகம்	**அத்தியாயம் 25** - பன்னாட்டு வணிகம்	131-136	
	அத்தியாயம் 26 - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்	137-145	**நவம்பர்**
	அத்தியாயம் 27 - பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்	146-151	
	அத்தியாயம் 28 - செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை	152-155	
அலகு 9 இந்திய ஒப்பந்தச் சட்டம்	**அத்தியாயம் 29** - ஒப்பந்தத்தின் கூறுகள்	156-160	
	இரண்டாம் பருவத் தேர்வு (அக்டோபர், நவம்பர்)		
	அத்தியாயம் 30 - ஒப்பந்த நிறைவேற்றம்	161-164	
	அத்தியாயம் 31 - ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை	165-168	**டிசம்பர்**
அலகு 10 நேர்முக மற்றும் மறைமுக வரிகள்	**அத்தியாயம் 32** - நேர்முக வரிகள்	169-173	
	அத்தியாயம் 33 - மறைமுக வரிகள்	174-178	
அரையாண்டுத் தேர்வு (மொத்த அலகுகள்)			
உடனடித் தேர்வு ஜூலை 2024 வினாத்தாள் விடைகளுடன்		179-186	

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

TO ORDER WITH US

SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'** Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

DIRECT DEPOSIT

A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **36550290536**
Bank Name	: **STATE BANK OF INDIA**
Bank Branch	: Padi
IFSC	: SBIN0005083

A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **21000210001240**
Bank Name	: **UCO BANK**
Bank Branch	: Anna Nagar West
IFSC	: UCBA0002100

A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **6502699356**
Bank Name	: **INDIAN BANK**
Bank Branch	: Asiad Colony
IFSC	: IDIB000A098

A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **1154135000017684**
Bank Name	: **KVB BANK**
Bank Branch	: Anna Nagar
IFSC	: KVBL0001154

A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **13240200032412**
Bank Name	: **FEDERAL BANK**
Bank Branch	: Anna Nagar
IFSC	: FDRL0001324

A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **50200031530945**
Bank Name	: **HDFC BANK**
Bank Branch	: Cenotaph Road, Teynampet
IFSC	: HDFC0001216

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

For PhonePe : 98409 26027

DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

STUDENTS :

Order via Money Order (M/O) to

SURA PUBLICATIONS
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

அலகு 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள்

அத்தியாயம் 1 இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி

பொருளடக்கம்

1.1. அறிமுகம்
1.2. பண்டமாற்று முறை
1.3. வணிகத் தடைகள்
1.4. தொழில் தடைகளும் அவற்றை நீக்கும் வழிகளும்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு _______ என்று பெயர் [QY. & HY. - 2019; Aug. - 2022; July-'23]

அ. அங்காடி　ஆ. சந்தை
இ. நாளங்காடி　ஈ. அல்லங்காடி

[விடை. (அ) அங்காடி]

2. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது. [BEQ; QY. - 2018 & '23; June - 2019; Sep. - 2020; July-'24]

அ. போக்குவரத்து　ஆ. பண்டகசாலை
இ. விற்பனையாளர்　ஈ. காப்பீடு

[விடை. (அ) போக்குவரத்து]

3. அர்த்தசாஸ்த்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?

அ. கௌடில்யர்　ஆ. வால்மிகி
இ. திருவள்ளுவர்　ஈ. இளங்கோவடிகள்

[விடை. (அ) கௌடில்யர்]

4. வியாபாரம் மற்றும் வணிகம் _______ பேரரசில் பொதுவானவையாக இருந்தது. [BEQ; First Mid - 2018; QY. - 2018; Sep. - 2021; April-'23]

அ. பல்லவர்　ஆ. சோழர்
இ. பாண்டியர்　ஈ. சேரர்

[விடை. (இ) பாண்டியர்]

5. _______ முதன்முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார். [CRT - 2022]

அ. பால்பன்　ஆ. வாஸ்கோடகாமா
இ. அக்பர்　ஈ. அலாவுதின் கில்ஜி

[விடை. (அ) பால்பன்]

II. குறுவிடை வினாக்கள்

1. பண்டமாற்றுமுறை என்றால் என்ன? [BEQ; HY. - 2018; June - 2019; Mar. - 2020; May - 2022; QY-'23; July-'24]

விடை : ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.

enquiry@surabooks.com　PH: 8124201000 / 8124301000

2. நாளங்காடி என்றால் என்ன? [BEQ; First Mid & QY. - 2018; QY. & Mar. - 2019; Sep. - 2020; CRT - 2022; April-'23]

விடை : (i) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது.

(ii) அப்பொருள்களின் விற்பனை, **பகலில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது.

3. அல்லங்காடி என்றால் என்ன?

விடை : (i) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது.

(ii) அப்பொருள்களின் விற்பனை, **இரவில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது.

III. சிறுவிடை வினாக்கள்

1. வணிகம் பொருள் தருக. [Mar.-'24]

விடை : (i) **பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றம்** செய்யும் ஓர் ஒழுங்கு முறை அமைப்பு வணிகம் என்றழைக்கப்படுகிறது.

(ii) பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

(iii) உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் வணிகம் முக்கியப் பங்காற்றுகிறது.

2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் - விளக்குக. [July-'23]

விடை : மருவூர்ப்பாக்கம் :

பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) என அழைக்கப்பட்டன. உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன. **எ.கா. :** தொண்டி, கொற்கை, பூம்புகார், முசிறி ஆகும்.

பட்டினப்பாக்கம் :

(i) பட்டினப்பாக்கம் என்பது **கடலோர நகரம்** ஆகும்.

(ii) எ.கா. முத்துக்கள், பவளங்கள், மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் இடம் பெற்றுள்ளன.

3. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை? [HY. - 2018; Sep. - 2021]

விடை : பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.

IV. பெருவிடை வினாக்கள்

1. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5) [BEQ; First Mid; QY.-2018 & '23; HY. - 2018; Mar. - 2019; July-'23 & '24]

விடை : (i) ஆள்சார் தடை (ii) இடத்தடை

(iii) காலத்தடை

(iv) இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை

(v) நட்ட இடர்பாட்டு தடை (vi) அறிசார் தடை

(vii) பண்டப் பரிமாற்றத் தடை (viii) நிதித் தடை

(ix) பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பத்தில் தடை

(x) பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்.

2. பண்டமாற்று முறையின் குறைபாடுகள் யாவை? [HY-'23]

விடை : பண்டமாற்று முறையில் பல குறைபாடுகள் உள்ளன. அவையாவன :

1. **இருவருடைய தேவைகள் உடன்பாடில்லாமல் இருத்தல் :**

(i) இருவரில் முதலாமவருடைய உபரிப் பொருட்கள் இரண்டாமவருக்குத் தேவையாகவும் இரண்டாமவருடைய உபரிப்பொருட்கள் முதலாமவருக்குத் தேவையாகவும் ஒத்துப் போக வேண்டும். இல்லையெனில் பண்டமாற்றம் நிகழாது.

(ii) எடுத்துக்காட்டாக, அகல்யா என்பவரிடம் உபரியாக நெல் உள்ளது. பாலமுரளி என்பவரிடம் உபரியாக துணி உள்ளது. இவற்றில் அகல்யாவுக்கு பாலமுரளியின் துணி தேவைப்பட வேண்டும். அதுபோலவே பாலமுரளிக்கு அகல்யாவின் நெல் தேவைப்பட வேண்டும்.

2. **பொதுவான மதிப்பீட்டு அளவு இல்லை :**

(i) ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி மதிப்பு உண்டு. மதிப்பீட்டில் யாதொரு பொதுமதிப்பும் பின்பற்றப்படுவதில்லை.

(ii) விலை மதிப்பீட்டின்மைக் காரணமாகப் பொருட்கள் மதிப்பீட்டு ஒப்புமையில் தடைகள் உள்ளன.

3. **உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் நேரடித் தொடர்பின்மை :**

விற்போரும் வாங்குவோரும் எப்பொழுதும் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆனால் இம்முறையில் நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டியது அவசியம்.

4. **உபரி இருப்பு வைக்க இயலாத நிலை :**

இம்முறையில் பொருட்கள் தேவைக்கு அதிகமாகக் கையிருப்பு இல்லையெனில், வணிகம் நடைபெற வழி ஏற்படாது.

www.surabooks.com

3. பண்டையத் தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக. [CRT & May - 2022]

விடை : (i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்பாக்கம் (உள் நாட்டு நகரம்) மற்றும் பட்டினம்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப்பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

(ii) தொண்டி, கொற்கை பூம்புகார் மற்றும் முசிறி ஆகிய துறைமுகங்கள் ஒட்டிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் இடங்களாக இருந்தன. வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தன. முத்துக்கள், பவளங்கள் மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் கப்பல் கட்டுதலிலும் ஈடுபட்டிருந்தனர்.

(iii) குறிப்பாக சிறியதான படகு திமிலா, தோணி, அம்பு ஓடம், புனை,கட்டுமரம் முதலியன உள்நாட்டு வியாபாரத்திற்கும், பேரளவுகலம், மரக்கலம், வங்கம், நாவாய் முதலியன வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர்.

அரசு தேர்வு வினாக்கள்

1 மதிப்பெண்

1. காலத் தடையை .... மூலம் நீக்கலாம். [May - 2022]

அ. விற்பனையாளர் ஆ. போக்குவரத்து

இ. காப்பீடு ஈ. பண்டகசாலை

[விடை. ஈ. பண்டகசாலை]

3 மதிப்பெண்கள்

1. பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்க காலத்தின் பங்கு என்ன? [BEQ; First Mid & QY. - 2018]

விடை : (i) சங்க காலத்தில் உள்நாட்டு வியாபாரமும், வெளிநாட்டு வியாபாரமும் பண்டமாற்று முறையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

(ii) இடைக்காலத்தில் வியாபாரம் பல்வேறு பகுதிகளை இணைக்க வழிவகை செய்தது.

(iii) மலைவாழ் மக்கள் தேன், பழங்கள் மற்றும் கிழங்குகளையும். நிலம் (தரை) வாழ் மக்கள், கால்நடைகள், பால் மற்றும் பால் பொருட்களையும் பண்டமாற்று செய்தனர்.

(iv) உள்நாட்டு வியாபாரத்தில் உப்பு மாற்றுப் பொருளாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(v) சிலகாலம் நெல் பண்டமாற்றுப் பொருளாக விளங்கியுள்ளது.

(vi) வியாபாரத்தில் ஒருவர் மற்றொருவரையும் சார்ந்து இருந்துள்ளனர்.

2. நிதித்தடை என்பது யாது? [QY. - 2019]

விடை : உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை வணிக ரீதியாக செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது.

3. பண்டமாற்று முறைக்கான இரண்டு நிபந்தனைகள் எழுதுக. [BEQ; First Mid - 2018; HY. - 2019; Sep. - 2020; Aug. - 2022; QY-'23]

விடை : (i) ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் (உபரி) பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

(ii) இருவருக்கும் அப்பொருட்கள் உரிமைமாற்றுத் தேவையாக இருக்க வேண்டும்.

(iii) பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

4. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை? [QY-'23]

விடை : பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.

5 மதிப்பெண்கள்

1. பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் போதும் வணிகத்தில் பல தடைகளும் இடையூறுகளும் ஏற்படுகின்றன. [BEQ; Govt. MQP - 2018]

(i) அத்தடைகள் ஏதேனும் ஐந்தினை பட்டியலிடுக.

(ii) அவற்றில் ஏதேனும் மூன்றினை விளக்குக.

(iii) அவற்றை நீக்கும் வழிகள் யாவை?

[அல்லது]

வணிகத்தின் தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன? [QY. - 2019; Sep. - 2021; July-'24]

விடை : (i) 1. ஆள்சார் தடை 2. இடத்தடை

3. காலத்தடை 4. நிதித்தடை

5. இடர்பாட்டுத் தடை

(ii) 1. **ஆள்சார் தடை**

(i) உற்பத்தியாளர் சிலர். நுகர்வோர் பலர்.

(ii) எனவே உற்பத்தியாளர் நுகர்வோரைச் சந்திக்கவும், நுகர்வோர் உற்பத்தியாளரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் அரிது. இது ஆள்சார் தடை ஆகும்.

2. **இடத்தடை**

(i) பொருட்கள் உற்பத்தி செய்வது ஒரு இடம். (மல்லிகை – மதுரை)

(ii) ஆனால் நுகரப்படுவது வேறொரு இடம் (சென்னை)

(iii) இரு இடங்களும் நிலப்பரப்பில் (தூரத்தால்) பிரிக்கப்பட்டுள்ளது. இது இடத்தடை ஆகும்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

3. **காலத்தடை**
   (i) உற்பத்தி செய்வது ஒரு காலம், ஆனால் அது நுகரப்படுவது மற்றொரு காலம்.
   (ii) உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடைப்பட்டக் காலத்தில் பொருட்கள் அழுகிப்போகும் (பழங்கள் – காய்கறிகள் – மீன்) இதுவே காலத்தடை ஆகும்.

4. **அறிவுசார் தடை :**
   சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக் கூடும். இத்தடை அறிவுசார் தடை என்கிறோம்.

5. **நட்ட இடர்பாட்டுத் தடை :**
   போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்க முடிவதில்லை, இந்நட்டத்தை ஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது.

(iii) 1. ஆள்சார்தடை வியாபாரத்தின் (மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி) மூலம் நீக்கப்படுகிறது.
2. இடத்தடை போக்குவரத்து மூலம் நீக்கப்படுகிறது.
3. காலத்தடை பண்டகக்காப்பு மூலம் நீக்கப்படுகிறது.
4. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் மூலம் நிதித்தடை நீக்கப்படுகிறது.
5. காப்பீடு மூலம் இடர்பாட்டுத்தடை நீக்கப்படுகிறது.

2. பண்டையத் தமிழ்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்களிப்பைப் பற்றி விளக்குக. **[Mar. - 2020]**

விடை : (i) ரோமாபுரி மற்றும் கிரேக்க வர்த்தகர்கள் பழங்காலத் தமிழ்நாட்டுக்கு வந்து பண்டைய சோழ, சேர, பாண்டிய மன்னர்களைச் சந்தித்து வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தினார்.

(ii) சீன சோங் வம்சத்தினர் சோழர்களுடன் வலுவான வர்த்தக உறவு கொண்டிருந்தனர். இந்தோனேசியா மற்றும் மலேசியாவை ஆண்டு கொண்டிருந்த ஸ்ரீ விஜய நகர சாம்ராஜ்ஜியத்தை, சோழர்கள் கைப்பற்றி, சீனாவுடன் கடலோர வணிகத்தைத் தொடர்ந்தனர்.

(iii) இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சீனத்தின் யுவான் சுவாங் என்பவர் கண்டறிந்து தனது தேசத்திற்கு எடுத்துரைத்துள்ளார். 16 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்ததன் காரணமாக இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் பரவலாக விரிவடைந்தது.

(iv) வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக கி.பி. 1496இல் இந்தியாவுக்கு வரும்போது அனைத்துப் புதிய கடல் வழிகளையும் கண்டுபிடித்ததால் நாகரிக உலகத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. மேலும் போர்த்து கீசியர்களின் இந்திய வருகை பிற ஐரோப்பிய சமூகங்களின் வருகைக்கு வழிவகுத்தது. இவ்வாறாக இந்தியாவின் கடலோர வர்த்தகம் ஐரோப்பியர்கள் மீது ஏகபோக உரிமை கொண்டதாக மாறியது.

(v) ஒரு கட்டத்தில் 17–ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் உலகளாவிய வர்த்தக பங்கு 55–விழுக்காடாக இருந்தது. 21–ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் உலகளாவிய வர்த்தக பங்கு 2 விழுக்காடாக தற்போது குறைந்து விட்ட நிலையில் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் படிப்படியாக பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் பல அரசர்களை பல்வேறு பகுதிகளில் வீழ்த்தினர்.

(vi) ஐரோப்பிய வர்த்தகத்தின் விளைவாக 17மற்றும் 18–ஆம் நூற்றாண்டுகளில் துணி மற்றும் கப்பல் கட்டுதல் பாரதத்தின் புகழ் பெற்றது. ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்திய பிராந்தியங்களில் இளவரசர்களின் கட்டளைகளை அகற்றினர். இதனால் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய பொருட்களின் விலை குறைந்தது. குறிப்பாக இந்திய ஜவுளிப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்ற பாரம்பரிய பொருட்களின் ஏற்றுமதிக்கு தடைகளை விதித்தார்கள். 1600 தொடக்கம் முதல் 19–ஆம் நூற்றாண்டின் முற் பகுதிக்கிடையில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆசியா முழுவதும் தங்களின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தது.

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடு எழுதுக

1 மதிப்பெண்

1. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் முக்கியமான ஆலம்பறை என்ற பண்டைய வர்த்தக நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?

அ. சென்னை ஆ. திருவள்ளூர்
இ. காஞ்சிபுரம் ஈ. வேலூர்

[விடை. (இ) காஞ்சிபுரம்]

2. பாண்டியர் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகம் இல்லாதது எவை? [BEQ]

அ. கொற்கை ஆ. சாலியூர்

இ. காயல்பட்டினம் ஈ. காவிரிப் பூம்பட்டினம்

[விடை. (ஈ) காவிரிப் பூம்பட்டினம்]

3. பொருட்களின் விலைகளைக் குறைத்து வியாபார வளர்ச்சியை பெருக்க வழி வகுத்தவர் யார்?

அ. அலாவுதீன் கில்ஜி ஆ. பால்பன்

இ. வாஸ்கோடகாமா ஈ. அக்பர்

[விடை. (அ) அலாவுதீன் கில்ஜி]

சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

1. பண்டைய கால தமிழ்நாட்டின் முக்கியமான வர்த்தக மையங்கள் யாவை?

விடை : (i) ராமநாதபுரம்

(ii) பொடுக்கி (அரிக்கமேடு – பாண்டிச்சேரி)

(iii) நாகப்பட்டினம் (நிகம்)

(iv) காயல்பட்டினம்

(v) காவேரி பூம்பட்டினம் (கெபிரிஸ்)

(vi) மரக்காணம் (சோப்டானா)

(vii) பெரிய பட்டினம்

(viii) கன்னியாகுமரி (கோமாரி)

2. செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது?

விடை : (i) சாணக்கியர் (கௌடில்யர்) இன் அர்த்த சாஸ்திரத்தில் வட இந்திய மௌரியக் காலப் பொருளாதார நிலையை விவரிக்கிறது.

(ii) இதன் வாயிலாக 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சந்தையின் வரலாற்றினை அறிந்து கொள்ளமுடிகிறது.

(iii) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அரசு குறிப்பிடும் ஓரிடத்தில் (மையப்படுத்துதல்) விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு முறையான வரிகள் செலுத்தப்பட்ட பிறகு விற்பனை செய்யப்படும்.

(iv) கருவூலம், வரிவிதிப்பு, தொழிற்சாலைகள், வணிகம், விவசாயம் மற்றும் இயற்கை வளங்களின் மூலம் செல்வத்தை உருவாக்கி அரசு நலன், மக்கள் நலன் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவது முக்கியம் என அறிவுறுத்தியுள்ளார்.

பெருவிடை வினாக்கள் 5 மதிப்பெண்கள்

1. வட இந்தியாவில் வணிகம் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியை விவரி.

விடை : (i) அரசியல் மாற்றங்கள் இருந்த போதும் 12–ஆம் நூற்றாண்டு முதல் 16–ஆம் நூற்றாண்டு வரை இந்தியா செழிப்புடன் விளங்கியது.

(ii) முதல் சுல்தான் ஆன பால்பன் அடர்ந்த வனப்பகுதியில் பாதைகளை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.

(iii) அலாவுதீன் கில்ஜி, பொருட்களின் விலைகளைக் குறைத்தும், இறக்குமதி செய்யப்பட்ட (பெர்ஷியா) பொருட்களுக்கு மானியம் வழங்கியும் வியாபார வளர்ச்சிக்கு உதவினார்.

(iv) அரேபியர்கள், வெளிநாட்டு வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும், இந்திய வர்த்தகர்களான தமிழர்கள், குஜராத்தியர்களை நசுக்க நினைக்காமல் ஆதரவு அளித்தனர்.

(v) கடலோர வர்த்தகம் மார்வாடிகள் மற்றும் குஜராத்தியர் கைகளிலும், மத்திய மேற்கு ஆசிய நிலப்பரப்பு வர்த்தகம் முல்கானியர்கள் (இந்துக்கள்) ஆப்கானியர்கள், குர்சானியர்கள் (ஈரானியர்) கைகளிலும் இருந்தது.

(vi) வெள்ளி மற்றும் தாமிர நாணய முறை நிறுவப்பட்டு, சுல்தான் காலகட்டத்திற்குள் வர்த்தகம் செழித்தோங்கியது.

(vii) டெல்லி, பம்பாய், அகமதாபாத், சோனார், சோனார்சன், ஜான்புர், லாகூர் போன்ற பெரிய நகரங்களில் நடைபெற்ற சந்தையினை மூரிஷ் என்ற பயணி விவரித்துள்ளார்.

(viii) காபூல், அரேபியா, ஐரோப்பா, மேற்கு ஆசியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து குதிரைகள், உலர் பழங்கள், விலையுயர்ந்த கற்கள், உயர் தர ஜவுளி, கண்ணாடிப் பொருட்கள் (பீங்கான்) கச்சாப்பட்டு, பவளப்பாறைகள், வாசனை எண்ணெய், வெல்வட் போன்ற பொருட்களை இந்தியா இறக்குமதி செய்தது.

(ix) 'இந்திய பொருட்கள் மலேசியா, சீனா, ஆப்கானிஸ்தான், பெர்சியா மத்திய ஆசியா, போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

(x) கைபர் கணவாய் வழியாக ஈராக், புகாரா போன்ற இடங்களில் இருந்து வந்தவர்கள், மலபார், குஜராத், காலிகட், காம்பிட், மங்களூர் ஆசிய இடங்களில் குடியேறி ஒரு பெரிய வணிக உலகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

☆ ☆ ☆

அத்தியாயம் 2 தொழிலின் நோக்கங்கள்

பொருளடக்கம்

2.1. மனிதச் செயல்பாடுகள்
2.2. பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள்
2.3. தொழிலின் தன்மைகள்
2.4. தொழிலின் நோக்கங்கள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. தொழிலின் முதன்மைக் குறிக்கோள் _______.
[BEQ; QY. & HY. - 2018; HY. - 2019; Sep. - 2021; April-'23]

அ. இலாபம் ஈட்டுதல்
ஆ. இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ. சிறப்புத் தேர்ச்சி
ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

[விடை. (அ) இலாபம் ஈட்டுதல்]

2. மருத்துவர் தொழில் என்பது ___________.
[BEQ; QY. - 2018, 2019 & '23; July-'24]

அ. வேலைவாய்ப்பு ஆ. தொழில்
இ. சிறப்புத் தொழில் ஈ. தனியார் வணிகம்

[விடை. (இ) சிறப்புத் தொழில்]

3. பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?
[BEQ; Govt. MQP - 2018; Sep. - 2020; CRT & May - 2022]

அ. பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்
ஆ. இடர் ஏற்றல்
இ. பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை
ஈ. சம்பளம்/கூலி **[விடை. (ஈ) சம்பளம்/கூலி]**

4. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.
[First Mid - 2018; QY. - 2019; Mar. - 2020; Aug. - 2022]

அ. பொருளாதாரச் செயல்பாடுகள்
ஆ. பண நடவடிக்கைகள்
இ. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
ஈ. நிதி நடவடிக்கைகள்

[விடை. (இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்]

II. குறுவிடை வினாக்கள்

1. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?

விடை : (i) வாழ்வாதாரத்திற்குத் தேவையான பணம், நிதிசார்ந்த ஆதாயங்கள் (இலாபம்) ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பொருளாதார நடவடிக்கை எனப்படும்.

(ii) **(எ.கா.)** பழவியாபாரி – பழங்களை விற்பனை செய்வது.

2. தொழில் என்றால் என்ன?

விடை : இலாபம் ஈட்டும் நோக்குடன் பொருட்களை உற்பத்தி செய்வது, கொள்முதல் செய்வது, விற்பனை செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது தொழில் ஆகும். (எ.கா) உற்பத்தியாளர், வியாபாரி.

3. வேலை என்றால் என்ன? [CRT - 2022; July & HY-'23]

விடை : வேலை என்பது **கூலி அல்லது ஊதியத்திற்காக** மற்றவர்களுக்குப் பணி ஆற்றுவது ஆகும். மற்றவர்களை பணியமர்த்துபவர், பணியமர்த்துநர் என்றும் அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். (எ.கா.) எழுத்தர்கள், வங்கி அலுவலர்கள், மேலாளர்கள்.

III. சிறுவிடை வினாக்கள்

1. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக. [April & QY-'23]

விடை : மனிதன், தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று கூறலாம்.

மனிதச் செயல்பாடுகளை, பொருளாதாரச் செயல்பாடுகள், பொருளாதாரம் சாராச் செயல்பாடுகள் என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



2. சிறுகுறிப்பு வரைக [அ] தொழில் [ஆ] சிறப்புத் தொழில்

விடை : (அ) தொழில் : [June - 2019; Sep. - 2020; Aug. - 2022]

(i) இலாபம் ஈட்டும் நோக்குடன், பொருட்களை உற்பத்தி செய்வதும், விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொழிலாகும்.

(ii) தொழிலின் நடவடிக்கைகள் என்பது.

1. மூலப் பொருட்களை வாங்குவது
2. பொருட்களை உற்பத்தி செய்வது
3. நுகர்வோரிடம் பொருட்களை சென்றடையச் செய்வது.

(ஆ) சிறப்புத் தொழில் : [May - 2022]

அந்தந்ததுறையால், அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.

(எ.கா.) வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.

3. தொழில் நடவடிக்கைகளின் வகைகள் யாவை? [CRT - 2022]

விடை : தொழில் செயல்பாடுகளை அளவு, உரிமை மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தலாம்,

1. **தொழில் அளவு அடிப்படையில்:** அளவின் அடிப்படையில்தொழில்செயல்பாடுகள் இருபெரும் பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை (அ) சிற்றளவு தொழில்கள் (ஆ) பேரளவு தொழில்கள்.
2. **உரிமை அடிப்படையில்:** தொழில்கள் உரிமை அடிப்படையில் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது. அவை (அ) தனியார் நிறுவனங்கள் (ஆ) பொது நிறுவனங்கள் (இ இணை நிறுவனங்கள்.
3. **பணிகள் அடிப்படையில்:** பணிகள் அடிப்படையில் தொழிற் செயல்பாடுகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை (அ) உற்பத்தித் தொழில் (ஆ) வணிகம்.

IV. பெருவிடை வினாக்கள்

1. தொழிலின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)

[Aug. - 2022]

விடை : (i) **பொருட்களை உற்பத்தி செய்தல்/திரட்டுதல் :** மனித தேவையை பூர்த்தி செய்ய பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று திரட்டல் வேண்டும்.

(ii) **விற்பனை அல்லது பரிமாற்றம் :** தொழிலின் மிக முக்கிய தன்மை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் ஆகும். தனிநபர் தன்னுடைய சுய தேவைக்காக துணி நெய்தல் அது தொழில் செயல்பாடு ஆகாது.

(iii) **பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது:** பொருட்கள் உற்பத்தி செய்தல் / திரட்டுதல் என்பது நுகர்வு பொருட்களான துணி, பேனா, பிரஷ், பைகள் ஆகியவற்றையும் உற்பத்தி பொருட்களான இயந்திரம் சார்ந்ததாகும். சேவைகள் என்பது மின்சாரம், எரிவாயு, குடிநீர் வழங்குதல் போக்குவரத்து, வங்கி, காப்பீடு தொடர்புடையதாகும்.

(iv) **ஒழுங்கு முறையில் தொடர்புடையது :** தனிப்பட்ட முறையில் வாங்கி விற்பது என்பது தொழில் ஆகாது. தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

(v) **இலாப நோக்கம் :** தொழிலின் மிக முக்கிய நோக்கம் இலாபம் ஈட்டுவது ஆகும். மனித இனம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துகொண்டு தன்னுடைய பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தினால் தொழில் எனலாம்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

(vi) **இடர்பாட்டிற்கான கூறு :** தொழிலில் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும். ஒரு வகையில் தன்னுடைய தொழிலை திறம்பட நிர்வாகம் செய்தாலும் இலாபம் என்பது மற்ற காரணிகளை சார்ந்து உள்ளது. அவையாவன, நுகர்வோர் விருப்பு, வெறுப்பு, மூலப்பொருள் பற்றாக்குறை, போக்குவரத்து சிக்கல், மின்சாரம் பற்றாக்குறை ஆகியன ஆகும். இதன் மூலம் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றது ஆகும். ஆகவே தொழில் செயல்பாடுகள் இடர்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

2. தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5) [BEQ; CRT & May - 2022; Mar.-'24]

விடை :

தொழில்	சிறப்புத் தொழில்	வேலைவாய்ப்பு
1. உருவாக்கும் முறை : தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள் பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டது.	சிறப்புத் தொழில் அமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல்	சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம் பெறுதல்.
2. பணியின் தன்மை : சரக்கு மற்றும் சேவையைப் பொது மக்களுக்கு அளித்தல்.	சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல்.	பணியாளர்களுக்கு வழங்கிய செயலைச் செய்தல்.
3. தகுதி : குறைந்தபட்ச தகுதி என்று ஏதுமில்லை.	குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு தகுதியும் / பயிற்சியும் பெறுதல்.	குறைந்த பட்சத் தகுதி தேவையில்லை.
4. அடிப்படை நோக்கம் : சமுதாயத்தின் தேவையைப் பூர்த்தி செய்து இலாபம் ஈட்டுதல்	சேவை புரிதல்	முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன் கூலி/ சம்பளம் பெறுதல்.
5. மூலதனம் : நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும்.	இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும்.	மூலதனம் ஏதும் தேவையில்லை.
6. வெகுமதி : இலாபம்	தொழில்முறை கட்டணம்	கூலி / சம்பளம்
7. இடர் : இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும்.	கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது.	நிலையான கூலி/ சம்பளம் இடர் ஏதுமில்லை.

3. தொழிலின் நோக்கங்களை விவரி. [BEQ; QY. - 2018 & 2019; Mar. - 2020]

விடை : தொழிலின் நோக்கங்கள் பின்வருமாறு:

(i) **பொருளாதார நோக்கங்கள் :**

1. தொழில்கள் பொருளாதார நோக்கம் என்பது இலாபம் ஈட்டுவதே ஆகும்.
2. மேலும் இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குதல், புதிய நுட்பங்களைக் கண்டுபிடித்தல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களே மிக முக்கியமானதாகும்.

(ii) **சமூக நோக்கங்கள் :**

1. சமூக நலனைப் பேணுவது என்பது சில தொழிலமைப்புகளை, சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.
2. எந்த தொழில் நடவடிக்கைகளும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக்கூடாது.

(iii) **நிறுவன நோக்கங்கள்:**

1. தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்பாடுகள் மூலம் பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் அமையப்பெற வேண்டும்.
2. அவை, நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீன மயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல், நுகர்வோருக்குத் திருப்திபடுத்துதல் ஆகியன மூலமாக அமையலாம்.

(iv) **மனித நோக்கங்கள் :**

1. தொழிலமைப்பு தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்காலத் தேவையை நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்பட வேண்டும்.
2. மேலும் இயலாதவர்கள், ஏழ்மை நிலையில் உள்ளவர்கள், நலம் காக்க உதவ வேண்டும். பணியாளர்களின், பொருளாதார, சமூக உளவியல் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவையாக அமைய வேண்டும்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

(v) தேசிய நோக்கங்கள் :

1. தொழில் நிறுவனம், ஒரு நாட்டினுடைய மிக முக்கிய அங்கமாக கருதப்படுவதால் அவை நாட்டின் நோக்கங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது.
2. கடமை வகையில் தன்னுடைய குறிக்கோளை அமைத்து தெளிவுபடுத்த வேண்டும்.
3. ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும்.
4. எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

அரசு தேர்வு வினாக்கள்

I மதிப்பெண்

1. கீழ்க்கண்டவற்றில் எது பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளின் அடிப்படையில் வருகின்றது? **[Mar. - 2019]**

அ. வழக்கறிஞர் தன் பணி செய்வது
ஆ. மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் வசூலித்தல்
இ. மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் வசூலித்தல்
ஈ. கோவிலுக்குச் செல்வது

[விடை. (ஈ) கோவிலுக்குச் செல்வது]

2. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை? **[Govt. MQP - 2018]**

அ. தொழில் – இலாபம்
ஆ. சிறப்புத் தொழில் – தொழில் முறைக் கட்டணம்
இ. வேலைவாய்ப்பு – சம்பளம் அல்லது கூலி
ஈ. உற்பத்தி தொழில் – வாங்குதல் அல்லது விற்றல்

[விடை. (ஈ) உற்பத்தி தொழில் – வாங்குதல் அல்லது விற்றல்]

3. பட்டியல் I-ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.[BEQ; Govt. MQP - 2018]

பட்டியல் I	பட்டியல் II
(i) பொருளாதார நோக்கங்கள்	1. வேலைவாய்ப்பு அளித்தல்
(ii) சமூக நோக்கங்கள்	2. நுகர்வோரை திருப்திபடுத்துதல்
(iii) நிறுவன நோக்கங்கள்	3. பொது நலன்
(iv) தேசிய நோக்கங்கள்	4. இலாபம் ஈட்டுவது

தொகுப்பு

	(i)	(ii)	(iii)	(iv)
அ.	1	2	3	4
ஆ.	4	3	2	1
இ.	2	3	1	4
ஈ.	3	4	1	2

[விடை. (ஆ) 4 3 2 1]

4. 'தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை' எனக் கூறியவர் :' **[Mar. - 2020]**

அ. வீலர்
ஆ. ஸ்பிரிகில்ஸ்
இ. ஜேம்ஸ் ஸ்டீபன்சன்
ஈ. H. ஹேனே

[விடை. (இ) ஜேம்ஸ் ஸ்டீபன்சன்]

2 & 3 மதிப்பெண்கள்

1. திருப்பதி என்பவர் ஒரு நகரத்தில் சிறப்புமிக்க இருதய நிபுணர் ஆவார். இதில் கூறப்பட்டுள்ள படி அவர் எந்த பொருளாதார செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளார்? அதன் பொருளை எழுதுக. **[BEQ; Govt. MQP - 2018]**

விடை : **சிறப்புத் தொழில் :** சிறப்புத் தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட **உயர்கல்வித் தகுதி** மற்றும் **நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும்** சிறப்பான பணிகள் ஆகும். வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணியினை சிறப்புத்தொழில் எனலாம். சிறப்புத் தொழில் மேற்கொள்பவர்களை சிறப்புத் தொழிலாளர்கள் எனவும் அவர்கள் பெறும் வருவாய் சிறப்புத் தொழில் கட்டணம் (Professional fee) எனவும் அழைக்கப்படும்.

2. சிறப்புத் தொழில் என்றால் என்ன? **[First Mid - 2018; QY. - 2019]**

விடை : சிறப்புத் தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட **உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும்** சிறப்பான பணிகள் ஆகும். (எ.கா.) வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணியினை சிறப்புத் தொழில் எனலாம்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

5 மதிப்பெண்கள்

1. பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

விடை : [BEQ; First Mid & QY. - 2018; June - 2019; Sep. - 2021]

பொருளாதாரச் செயல்பாடுகள்	பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
வரைவிலக்கணம் : வாழ்வாதாரத்திற்குத் தேவையான பணம், நிதி சார்ந்த ஆதாயங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் செயல்பாடுகள் எனப்படும். (எகா.) பழவியாபாரி பழங்களை விற்பது.	மகிழ்ச்சி, அன்பு, இரக்கம் உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஆகும். (எகா) தாய் தன் குடும்பத்திற்காக உணவு சமைப்பது.
நோக்கம் : இலாபம் ஈட்டுவது அல்லது நிதி சார்ந்த ஆதாயம் அடைவது ஒன்றே நோக்கம் ஆகும். (எகா.) ஒரு வழக்கறிஞர் தன் பணியைச் செய்வது	சமூக, உளவியல், உணர்வுரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும். (எகா.) கோவிலுக்குச் செல்வது.
பணத்தின் அடிப்படையில் அளவிடல் : அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளையும் பணமதிப்பின் அடிப்படையில் அளவிடலாம். (எகா.) ஒரு மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் ₹ 500 வசூலித்தல்.	பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளை பண மதிப்பின் அடிப்படையில் அளவிட முடியாது. இவைகள் எண்ணம், உணர்வுகள் ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும். (எகா.)ஒரு அரசு சாரா அமைப்பு ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக உடைகள் வழங்குவதைக் கூறலாம்.
உறவு : பொருளாதார நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதுடன் தொடர்புடையவை. (எ.கா.) ராம் என்பவர் சொந்தமாக வீடு வாங்குவதற்காக தனது ஊதியத்தின் ஒரு பகுதியை சேமித்து வருவது.	பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதில்லை. (எ.கா.) நன்கொடையாகப் பெற்ற பணத்தை அறக்கொடை பணிகளுக்குச் செலவிடுவது.
கால அளவு : பொருளாதார நடவடிக்கைகள் திரும்ப திரும்பத் நிகழும் தன்மை கொண்டது (எ.கா.) குல்பி ஐஸ்கீரிம் விற்பவர் நாள்தோறும் மாலை வேளைகளில் விற்பார்.	இவை தொடர்ந்து நிகழாது. மேலும் நேரம் கிடைக்கும் போது நிகழும். (எ.கா.) ஆதரவற்றோர் இல்லம் சென்று பார்த்தல்.
உருவாக காரணம் : பொருளாதார நடவடிக்கைகள் மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படுகிறது.	பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் உணர்வுப் பூர்வமாக மகிழ்ச்சியினை அனுபவிக்கச் செய்யப்படுகிறது.

கூடுதல் வினாக்கள்

குறுவிடை வினாக்கள் — 2 மதிப்பெண்கள்

1. இணை நிறுவனங்கள் என்றால் என்ன?

விடை : அரசும், தனிநபரும் ஒருங்கிணைந்து உருவாக்கி ஒரு தொழிலமைப்பை கட்டுப்படுத்தும் தொழிலமைப்புகள் இணை நிறுவனங்கள் ஆகும்.

(எ.கா.) மாருதி சுசூகி.

சிறுவிடை வினாக்கள் — 3 மதிப்பெண்கள்

1. மனிதச் செயல்பாடுகளை விவரி.

விடை : மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று கூறலாம்.

மனிதச் செயல்பாடுகளைப் பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

I. பொருளாதாரச் செயல்பாடுகள் :

எந்தவொரு பொருளாதாரச் செயல்பாடு அல்லது நடவடிக்கையின் நோக்கம் இலாபம் ஈட்டுவதே ஆகும். இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

(எ.கா.) 1) தயாரிப்பாளர்களால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது.

2) மொத்த வியாபாரிகளால் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது.

II. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் :

சமூக மற்றும் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் எனலாம். இதன் நோக்கம் இலாபம் ஈட்டுவதாக இருக்காது.

(எ.கா.) 1) குடும்பத்திற்கு உணவு சமைப்பது.

2) விழாக்கள் கொண்டாடுவது.

☆☆☆

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

அத்தியாயம் 3 தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

பொருளடக்கம்

3.1. உற்பத்தித் தொழில்
3.2. வணிகம்
3.3. வியாபாரம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது [July-'24]

அ. கட்டுமானத் தொழில்கள்
ஆ. தயாரிப்புத் தொழில்கள்
இ. பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள்
ஈ. மரபுசார் உற்பத்தித் தொழில்கள்

[விடை. (இ) பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள்]

2. ஒரு முழுப்பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது [HY. - 2018; Aug. 2022]

அ. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்
ஆ. செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
இ. தொடர்முறை உற்பத்தித் தொழில்
ஈ. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

[விடை. (இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்]

3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது.
[BEQ; Govt. MQP; First Mid-2018; QY. - 2018. 2019 & '23; HY. - 2019 & '23; Sep. - 2020; CRT & May - 2022]

அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம்
இ. வியாபாரம் ஈ. இவை அனைத்தும்

[விடை. (அ) உற்பத்தித் தொழில்]

II. குறுவிடை வினாக்கள்

1. வணிகத்தை வரையறு.
[BEQ; HY. - 2018; QY. - 2019; Aug. - 2022]

விடை : எவ்லின் தாமஸ் அவர்களின் கூற்றுப்படி "வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும் விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும்."

2. உற்பத்தித் தொழில் என்றால் என்ன? [BEQ; First Mid - 2018]

விடை : வளங்களை இயந்திரம் மற்றும் தொழில்நுட்பத் திறமையுடன் உபயோகிக்கவல்ல பொருளாக மாற்றக் கூடியதே உற்பத்தித் தொழில் என்கிறோம்.

3. வியாபாரம் என்றால் என்ன? [CRT - 2022]

விடை : வியாபாரம் என்பது பணத்திற்காக பொருளை வாங்குவதும், விற்பதுமான பணியைக் குறிக்கும். இதில் வாங்குபவரும் விற்பவரும் ஆகிய இருவரும் இடம்பெற வேண்டும். இது உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம் என இருவகைப்படும்.

III. சிறுவிடை வினாக்கள்

1. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
[QY. - 2019; May - 2022; HY-'23]

விடை : இத்தொழில்கள், இயல் பொருட்களை உற்பத்தி செய்வது இல்லை. மாறாக சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்கின்றன. இவ்வகை சேவை வியாபாரம் பல வகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன.

(எ.கா.) மருத்துவ கருவிகள், தயாரிப்புத் தொழிற்சாலை, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில் வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களான வங்கியியல், காப்பீடு, பண்டகக்காப்பு ஆகியவை இந்தச் சேவைத் தொழிற்சாலையில் உள்ளடங்கும்.

2. போக்குவரத்து - சிறுகுறிப்பு வரைக.

விடை : உற்பத்தி செய்த பொருட்களை உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தையும் விற்பது அரிது. அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களுக்குச் சென்று சேர்க்க வேண்டிய பணியை போக்குவரத்துச் செய்கிறது. அதாவது உற்பத்தியாளரிடம் இருந்து நுகர்வோர்கட்கு **பொருட்களை நகர்த்தும் ஒரு ஊடகமாக** போக்குவரத்து விளங்குகிறது.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

IV. பெருவிடை வினாக்கள்

1. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)

[BEQ; First Mid; QY. & HY. - 2018; QY. & HY. - 2019; April-'23]

விடை :

உற்பத்தி தொழில்	வணிகம்	வியாபாரம்
1. **பொருள் :** உற்பத்தித் தொழில் என்ற சொல் பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களைத் தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது.	வணிகம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது.	வியாபாரம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது.
2. **உள்ளடக்கம் :** கச்சாப் பொருட்கள் பகுதியாக முடிவுபெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கையையும் உள்ளடக்கியது.	வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது.	பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது.
3. **முதல் :** பொதுவாக உற்பத்தித் தொழிலுக்கு அதிக அளவு முதலீடு என்பது தேவைப்படுகிறது.	வணிகத்திற்கு முதல் குறைந்த அளவே தேவைப்படுகிறது.	போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும் கடன் அளிக்கவும் போதுமான முதல் தேவைப்படும்.
4. **இடர்பாடு :** அதிக இடர்பாட்டைக் கொண்டது.	குறைவான இடர்பாட்டைக் கொண்டது.	குறைவான இடர்பாட்டைக் கொண்டது.
5. **பரிமாணம் :** பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.	பொருட்கள் மற்றும் சேவையின் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.	இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.
6. **பயன்பாட்டு உருவாக்கம் :** உருவப் பயன்பாட்டை உருவாக்குகிறது.	பொருட்களைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்குக் கொண்டு செல்வதன் மூலம் இடர்ப் பயன்பாட்டை உருவாக்குகிறது.	பரிவர்த்தனை மூலம் உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது.

2. சிறு குறிப்பு வரைக : [Mar. - 2019; CRT - 2022]

அ. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்

ஆ. மரபுசார் உற்பத்தித் தொழில்கள்

இ. கட்டுமானத் தொழில்கள்

விடை : **அ. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் :**

ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் **பகுத்து ஆராய்ந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலை** ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆகும். **(எ.கா.)** எண்ணை சுத்திகரிக்கும் தொழிற்சாலையில், கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பிரித்தல்.

ஆ. மரபுசார் உற்பத்தித் தொழில்கள் :

தாவரங்களும் மிருகங்களும், நுகர்வோரின் உபயோகத்திற்கு வளர்க்கப்படுவன. எனவே இவை மரபுகள் உற்பத்தி தொழிற்சாலை எனப்படுகின்றன. **(எ.கா.)** கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு போன்றவை.

இ. கட்டுமானத் தொழில்கள் :

கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் **கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும்** தொழிற்சாலையே கட்டுமானத் தொழிற்சாலை எனப்படுகிறது.

அரசு தேர்வு வினாக்கள்

1 மதிப்பெண்

1. கீழ்கண்ட கூற்றுகளில் எது தவறான கூற்றாகும்?

[BEQ; Govt. MQP - 2018]

அ. பூமியில் இருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்கள் பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழிலாகும்.

ஆ. தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவது மரபுசார் தொழிற்சாலைகள் ஆகும்.

இ. கச்சாப் பொருட்களை பல்வேறு படிநிலைகளில் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வது தயாரிப்பு தொழிற்சாலை ஆகும்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

ஈ. கச்சாப் பொருட்கள் பல்வேறு படிநிலைகளைக் கடந்து தாட்கள் மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களை தயாரிப்பது கட்டுமானத் தொழிற்சாலை ஆகும்.

[விடை. (ஈ) கச்சாப் பொருட்கள் பல்வேறு படிநிலைகளைக் கடந்து தாட்கள் மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களை தயாரிப்பது கட்டுமானத் தொழிற்சாலை ஆகும்.]

2. வியாபாரத்திற்கு உறுதுணை புரிபவை என்பது. [BEQ; QY. - 2018]

அ. வியாபாரம் ஆ. விளம்பரம்

இ. பண்டக சாலை ஈ. கட்டுமானம்

[விடை. (ஈ) கட்டுமானம்]

3. பொருத்துக. [Mar.-'24]

சேவைத் தொழில்கள்		எடுத்துக்காட்டு	
(1)	தனிச் சேவை	(i)	பொருட்கள் ஏற்றிச் செல்லுதல்
(2)	பொதுச் சேவை	(ii)	வீட்டு பணியாட்கள்
(3)	விநியோகச் சேவை	(iii)	தணிக்கையியல்
(4)	தனித்துவச் சேவை	(iv)	பள்ளிகள்

அ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

ஆ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

இ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

[விடை. (ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)]

2 மதிப்பெண்கள்

1. சிவா என்பவர் இராமேஸ்வரத்தில், தனக்கு சொந்தமாக ஐந்து படகுகளை வைத்து மீன் பிடிக்கும் தொழிலை செய்து வருகிறார். அவர் செய்யும் உற்பத்தித் தொழிலின் பெயர் என்ன? பொருள் கூறுக. [BEQ; Govt. MQP - 2018]

விடை : சிவா பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழிலை செய்து வருகிறார்.

பொருள் :

பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் பொருட்களைத் **தூய்மைசெய்து பிரித்தெடுக்கக் கூடிய தொழிற்சாலைகளுக்குப்** பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்று பெயர்.

2. குமார் என்பவர் நாமக்கல் என்ற ஊரில் ஒரு கால்நடைப் பண்ணையை சொந்தமாக வைத்துள்ளார்.

(i) இது பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழிலுக்கு உதாரணமாகுமா?

(ii) அதன் பொருள் தருக. [BEQ; Govt. MQP - 2018]

விடை : (i) இல்லை. கால்நடைப் பண்ணை மரபுசார் உற்பத்தி தொழிலுக்கு உதாரணமாகும்.

(ii) தாவரங்களும், மிருகங்களும் **நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன** மரபு உற்பத்தித் தொழில்கள் எனப்படுகின்றன.

3 மதிப்பெண்கள்

1. இயற்கையோடு தொடர்பு கொண்டு, அதன் உதவியால் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தி தொழிலின் பெயரைக் குறிப்பிடுக. அவற்றின் வகைகளின் இரண்டினைப் பற்றி எழுதுக. [BEQ; Govt. MQP - 2018; Mar. - 2019]

விடை : முதன்மை உற்பத்தித் தொழில்கள் இயற்கையோடு தொடர்புடையவை. இது இரண்டு வகைப்படும்.

1. **பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள் :**
   பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களைக் கொண்டது
   எடுத்துக்காட்டு : நிலக்கரி மற்றும் கச்சா எண்ணை எடுத்தல் முதலியவை.
2. **மரபுசார் உற்பத்தித் தொழில்கள் :**
   தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன மரபு உற்பத்தித் தொழில்கள் எனப்படுகின்றன.
   எடுத்துக்காட்டு : கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு .

2. வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரி. [QY. & HY. - 2018, QY. - 2019]

விடை : (i) **வணிகம் ஒரு பொருளாதாரச் செயல்:** பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து நுகரும் இடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

(ii) **பொருட்கள் பரிமாற்றம் :** பொருட்களை வாங்குதலும் விற்றலும் ஆகிய பணியைச் செய்வது வணிகம்.

(iii) **இலாபநோக்கம் :** வணிகத்தின் மிக முக்கிய நோக்கம் இலாபம் ஈட்டுவது.

5 மதிப்பெண்கள்

1. வணிகம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கும் ஆனால் வியாபாரம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குதல் மற்றும் விற்பதைக் குறிக்கும். இதைத்தவிர இவை இரண்டிற்கும் உள்ள மற்ற வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக. [BEQ; Govt. MQP - 2018]

விடை :

வணிகம்	வியாபாரம்
1. பொருள்	
வணிகம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலை குறிக்கின்றது.	வியாபாரம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது.

www.surabooks.com

2. உள்ளடக்கம்	
வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது.	பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது.
3. முதல்	
வணிகத்திற்கு முதல் குறைந்த அளவே தேவைப்படுகிறது.	போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் போதுமான முதல் தேவைப்படும்.
4. இடர்பாடு	
குறைவான இடர்பாட்டைக் கொண்டது.	குறைவான இடர்பாட்டைக் கொண்டது.
5. பரிமாணம்	
பொருட்கள் மற்றும் சேவையில் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.	இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.
6. பயன்பாட்டு உருவாக்கம்	
பொருட்களைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்கு கொண்டு செல்வதன் மூலம் இடப்பயன்பாட்டை உருவாக்குகிறது.	பரிவர்த்தனை மூலம் உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது.

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1 மதிப்பெண்

1. கட்டிடங்கள், பாலங்கள், அணைகள் கட்டத் தேவையான பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு _______ என்று பெயர்.

அ. கட்டுமானத் தொழில்கள்
ஆ. தயாரிப்புத் தொழில்கள்
இ. உற்பத்தித் தொழில்கள்
ஈ. சேவைத் தொழில்கள்

[விடை. (அ) கட்டுமானத் தொழில்கள்]

2. மருத்துவ கருவிகள், கல்விச் சேவை, சுற்றுலாத் தொழில் ஆகியவற்றை வழங்கும் தொழிற்சாலைக்கு _______ என்று பெயர்,

அ. முதன்மைத் தொழில்கள்
ஆ. இரண்டாம் நிலைத் தொழில்கள்
இ. பகுப்பாய்வு உற்பத்தி தொழில்கள்
ஈ. சேவைத் தொழில்கள்

[விடை. (ஈ) சேவைத் தொழில்கள்]

3. வணிகம் என்பது எதனை உள்ளடக்கியது?

அ. பொருட்களை அளித்தல்
ஆ. பொருட்கள் விலையிடல்
இ. பொருட்களைக் கொள்முதல் மற்றும் விற்பனை செய்தல்
ஈ. பொருட்களை தயாரித்தல்.

[விடை. (இ) பொருட்களைக் கொள்முதல் மற்றும் விற்பனை செய்தல்]

சிறுவிடை வினாக்கள் — 2 மதிப்பெண்கள்

1. பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள் மற்றும் மரபுசார் உற்பத்தித் தொழில்களை வேறுபடுத்துக.

விடை :

பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்	மரபுசார் உற்பத்தி தொழில்கள்
1. பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களைக் கொண்டது.	தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன மரபுசார் உற்பத்தித் தொழில்கள் எனப்படுகின்றன.
2. (எ.கா.) நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் எடுத்தல்.	(எ.கா.) கால்நடைகள் வளர்ப்பு கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு போன்றவை.

2. வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.

விடை : (i) இது, பொருட்கள் மற்றும் சேவைகளைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்கு பரிமாற்றம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. வணிகம் என்பது இரண்டு வகைப்படும் ஒன்று வியாபாரம் மற்றொன்று வியாபாரத்திற்கு உறுதுணைப் புரிபவை.

(ii) ஒரு நாடு அல்லது மாநிலத்தின் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் வணிகம் என்கிறோம்.

(iii) வணிகம் என்பது வியாபாரம் மட்டும் இல்லாமல், இதர சேவைகளான, போக்குவரத்து, பண்டகக் காப்பு, கட்டுமப் பணிக் காப்பீடு, வங்கிச் சேவை விற்பனை அதிகரிப்பு உள்ளிட்டவைகள் அடங்கியதாகும்.

(எ.கா.) மதுரை மல்லிகை – சென்னையில் விற்பது.
சேலம் மாம்பழம் – மதுரையில் விற்பது
காஷ்மீர் ஆப்பிள் – கன்னியாகுமரியில் விற்பது.

www.surabooks.com

பெருவிடை வினாக்கள் 5 மதிப்பெண்கள்

1. உற்பத்தித் தொழில்களின் வகைகளை அதன் அளவுகளின் அடிப்படையில் விவரி.

விடை : தொழில் முதலீடுகளின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன. குறுந்தொழில்கள், சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள்.

குறுந்தொழில்கள் :

(i) இதற்கு மிக **குறைந்த அளவு மூலதனமே** தேவைப்படும்

(ii) ஒரு தனிநபர் தன்னிடமுள்ள சிறு முதலைக் கொண்டு தொழில் தொடங்கலாம்.

(iii) **(எ.கா.)** பெட்டிக்கடை, அடுமனை.

சிறு தொழில்கள் :

(i) குறுந்தொழில்களைக் காட்டிலும் **சற்று அதிக அளவு மூலதனம்** தேவைப்படும்.

(ii) இதன் உரிமையாளர் சிலரை பணியாளர்களாக நியமித்துக் கொள்ளலாம்.

(iii) பொதுவாக மக்கள் வசிக்கும் இடத்தில் இவைகள் தொடங்கப்படுகின்றன.

நடுத்தரத் தொழில்கள் :

(i) ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டாகச் சேர்ந்து இவ்வகைத் தொழில்களைத் தொடங்கலாம்.

(ii) ஒவ்வொரு கூட்டாளியும் முதலிடுவர். இதனால் **கூடுதலான முதல்** கிடைக்கும்.

(iii) **(எ.கா.)** கூட்டாண்மை நிறுவனம்.

பேரளவுத் தொழில்கள் :

(i) இது கூட்டுப் பங்கு நிறுமம் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது.

(ii) இதற்கு **பேரளவு மூலதனம்** தேவை.

(iii) இது பொது மக்களுக்கு பங்குகள் வெளியிடுவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டுகின்றது.

(iv) மொத்த முதல் சிறு சம அலகுகளாக (பங்குகள்) பொதுமக்களுக்கு வெளியிடப்படுகிறது.

(v) இது பெரிய அளவில் செயல்படும் நிறுவனமாகும்.

(vi) **(எ.கா.)** துறைவாரி (அ) பல பிரிவு பண்டகசாலை.

2. வணிகத்திற்கு உறுதுணையானவற்றைச் சுருக்கமாக விவரி.

(i) **போக்குவரத்து :**

1. உற்பத்தி செய்த பொருட்களை உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தையும் விற்பது என்பது அரிது.

2. அவற்றை நாட்டின் (அல்லது) உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களுக்குச் சென்று சேர்க்க வேண்டியதை போக்குவரத்து செய்கிறது.

(ii) **வங்கியியல் :**

1. வங்கிகளின் உதவியின்றி எந்த தொழில் அமைப்பும் இயங்க முடியாத அளவிற்கு வங்கிச்சேவை மகத்துவம் பெற்று விளக்குகிறது.

2. வங்கிகள் தொழில் அமைப்புகளிடம் உள்ள பணத்தை வைப்புகளாக பெறுவதுடன், தொழில் அமைப்புக்குத் தேவையான நிதியை பல்வேறு கடன் திட்டங்கள் மூலம் கிடைக்க வகை செய்கிறது.

3. வங்கி நிதியின் மூலம் தொழில் அமைப்புகள் நில சொத்து வாங்குதல், சரக்கு கொள்முதல் செய்தல், இயந்திரம் வாங்குதல் போன்ற நடைமுறை செலவுகளைச் செய்ய ஒரு தொழில் அமைப்பிற்கு குருதி ஓட்டமாக செயல்படுகிறது.

(iii) **காப்பீடு :**

1. வியாபாரம் நடத்துவது என்பது முழுக்க முழுக்க இடர்பாடு செறிந்த செயலாகும். வியாபாரம் நிறுமங்கள் இடர் என்ற கடலில் எப்போதும் நீந்திச் செல்லும் கப்பல் ஆகும்.

2. எல்லா தொழில் நிறுமங்களும், தீ, களவு, சூறாவளி, நில நடுக்கம், கடல் நடுக்கம், வெடிவிபத்து, இயந்திரக் கோளாறு போன்ற பலதரப்பட்ட இடர்பாட்டால் காப்பீடு செய்ய வேண்டிய அவசியமாகிறது.

(iv) **பண்டகக் காப்பு செய்தல் :**

1. சாதாரணமாக பொருட்கள் யாவும் உற்பத்தி செய்யப்பட்ட உடனே விற்கப்படுவதில்லை மற்றும் நுகரப்படுவதில்லை.

2. பொருட்கள் தேவைப்படும் நேரத்தில் அவை கிடைப்பதற்கு ஏற்றவாறு இருப்பு வைத்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

3. பண்டகக்காப்பகங்கள் தொழில் நிறுவனங்களின் பொருட்களை சேமித்து வைக்க பேருதவி புரிகின்றன.

4. பொருட்கள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதால் விலை சீராக இருக்க வகை செய்யப்படுகிறது.

☆ ☆ ☆

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

அலகு 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம் 4 தனியாள் வணிகம்

பொருளடக்கம்

4.1. தொழில் அமைப்பு
4.2. தனியாள் வணிகம்
4.3. சிறப்பியல்புகள்
4.4. தனியாள் வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்? [BEQ; QY. - 2018; Mar. & HY. - 2019; Sep. - 2021; April-'23]

அ. தனியாள் வணிகம்
ஆ. கூட்டாண்மை
இ. கூட்டுறவுச் சங்கம்
ஈ. நிறுமம்

[விடை. (அ) தனியாள் வணிகம்]

2. எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்? [May - 2022] [July-'24]

அ. கூட்டு நிறுவனம்
ஆ. அரசு நிறுவனம்
இ. கூட்டுறவுச் சங்கம்
ஈ. தனியாள் வணிகம்

[விடை. (ஈ) தனியாள் வணிகம்]

3. தனியாள் வணிகத்தின் பொறுப்பு

அ. வரையறு பொறுப்பு ஆ. வரையறாப் பொறுப்பு
இ. அமைப்பது எளிது ஈ. விரைவான முடிவு

[விடை. (ஆ) வரையறாப் பொறுப்பு]

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று கூட்டுரு சாரா நிறுவனம்? [QY-'23]

அ. கூட்டுப் பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு

[விடை. ஆ. தனியாள் வணிகம்]

II. குறுவிடை வினாக்கள்

1. தனியாள் வணிகம் என்றால் என்ன?

விடை : தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும்.

2. கூட்டுரு சாரா நிறுவனங்கள் யாவை? [Mar.-'24]

விடை : (i) தனியாள் வணிக நிறுவனம்
(ii) கூட்டாண்மை நிறுவனம்
(iii) இந்து கூட்டுக் குடும்ப நிறுவனம்

3. கூட்டுரு நிறுவனங்கள் யாவை? [HY-'23]

விடை : (i) அரசு
1. பொதுத்துறை நிறுவனங்கள்
2. பொதுப் பயன்பாட்டு நிறுவனங்கள்
(ii) தனியார் – கூட்டுப்பங்கு நிறுமங்கள்
(iii) கூட்டுறவுத் துறை

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

III. சிறுவிடை வினாக்கள்

1. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
[Mar. - 2019; Sep. - 2021; July-'23 &'24; QY-'23]

விடை : தனியாள் வணிகரின் பொறுப்பு **வரையறுக்கப்படாதது.** அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டுத் தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்த சொத்திற்கு ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.

2. தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறு.
[QY. - 2019;CRT - 2022]

விடை :

(i)	**குறைந்த மூலதனம்**	: இனிப்பு கடை, பெட்டிகடை.
(ii)	**விரைவான முடிவு**	: பங்குதாரர், மருத்துவர்.
(iii)	**குறைந்த இடர்பாடு**	: ஊர்தி பழுது பார்க்கும் தொழில், சில்லறை விற்பனை நிலையம்.
(iv)	**வாடிக்கையர் விருப்பு வெறுப்பு**	: அழகு நிலையம், தையலகம்.

IV. பெருவிடை வினாக்கள்

1. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)
[June & QY. - 2019; Sep - 2020; CRT & May - 2022; July-'24]

விடை : (i) **தனி நபர் உரிமை :**

1. இது தனி நபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார்.
2. தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இல்லாவிட்டாலும் அதன் அமைப்பு முழுவதையும் அவரே கட்டுப்படுத்துகிறார்.

(ii) **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :**

1. தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார்.
2. தனியாள் வணிகர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் குறுக்கீடின்றிச் செயல்படுகிறார்.
3. தனி உரிமையாளர் உடனடியாகவும் விரைவாகவும் முடிவு எடுக்கிறார்.

(iii) **வரையறாப் பொறுப்பு :**

1. தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
2. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளை பறிமுதல் செய்ய கடனீந்தோருக்கு உரிமை உண்டு.

(iv) **முழு இலாபத்தையும் அனுபவித்தல் :**

1. அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனியாள் வணிகருக்கு உண்டு.
2. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.

(v) **அரசு விதிமுறைகள் பின்பற்றாமை :**

1. தனியாள் வணிகர் அரசின் விதிமுறைகளின் குறுக்கீடு இன்றிச் செயல்படுகிறார்.
2. இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ, அரசின் விதிமுறைகள் பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லை.

(vi) **குறைந்த மூலதனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மேலாண்மை திறன் :**

1. தனியாள் வணிகர் தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் அது சிறிய அளவிலேயே இருக்கும். அதனால் நிதித்தடை ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.
2. தனி உரிமையாளரின் மேலாண்மை திறன் குறைவாக இருக்கும் சூழ்நிலையில் நிறுவன விரிவாக்கம் பாதிக்கப்படலாம்.

2. தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5) [BEQ; QY. - 2018 & '23; Mar. - 2020; Sep. - 2021]

விடை : (i) **எளிதான அமைப்பு :**

1. தனியாள் வணிகம் மட்டுமே வியாபார அமைப்பு வடிவங்களில் **சட்ட சடங்குமுறை ஏதுமின்றி** துவக்கலாம்.
2. ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியமில்லையாதலால் தொழில் முனைய விரும்புவர் எவரும் தொடங்கலாம்.

(ii) **கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு :**

1. முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பு இருப்பதால் தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார்.
2. இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து, அயராது உழைக்கச் செய்கிறது.

(iii) **குறைந்த மூலதனம் :**

1. தனியாள் வணிகத்தின் சிறப்பான நன்மையே குறைந்த மூலதனம் ஆகும்.
2. அவர் குறைந்த மூலதனத்துடன் தொழில் தொடங்க இயலும்.

(iv) **கடன் தகுதி :**

1. வியாபாரக் கடன்களைத் தனது சொந்த சொத்துக்களிலிருந்து தீர்ப்பதால் கடனீந்தோர் எளிதாக கடன் தர முன்வருவர்.
2. அதனால் அவருக்குத் தேவையான அளவு கடன் வசதி எளிதாகக் கிடைக்கும்.

(v) **வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பு:**

1. வாடிக்கையாளரின் விருப்பங்களைத் தெரிந்திருப்பதால் அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார்.
2. அவரின் மரியாதையான வரவேற்பு மற்றும் இணக்கமான சூழல்களைப் புரிந்து கொண்டு நிறைவேற்றுகிறார்.

(vi) **நெகிழ்வுத்தன்மை :**

தனியாள் வணிகர் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப வாடிக்கையாளரின் விருப்பத்திற்கு இணங்க தன் வியாபார நிலைகளை மாற்றிக்கொள்ளலாம்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

3. தனியாள் வணிகரின் குறைபாடுகளை விவரி. [CRT & Aug. - 2022; July-'23]

விடை : (i) **அளவான முதல் :**

1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.
2. அவரின் **கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும்** மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

(ii) **வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன் :**

1. வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஒரு மனிதரால் கட்டுப்படுத்தப்படுகிறது.
2. அவரின் அறிவும் திறமையும் குறிப்பிட்ட அளவிற்கு மேல் வியாபார நடவடிக்கையில் செலுத்த வேண்டி இருப்பதால் அதிகப்படியான மன அழுத்தம் ஏற்படுவதுடன் தவறான முடிவெடுக்க ஏதுவாகிறது.
3. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறமையே அவரின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதைத் தடை செய்கிறது.

(iii) **வரையறாப் பொறுப்பு :**

1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

(iv) **சிறப்புத் தேர்ச்சியின்மை :**

1. தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில் இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது.
2. பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களையும் பணியமர்த்தப் போதிய பொருளாதார வளம் இல்லாத காரணத்தினால் அதிக நன்மைகளைப் பெற இயலாது.
3. அவர் ஒருவரே உற்பத்தி, சந்தையிடுதல், கணக்குப்பதிவியல், கடிதத் தொடர்பு போன்ற பணிகளை ஒருவரே கையாள முடியாது.

(v) **அவசர முடிவு :**

1. அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாக இருந்தாலும் சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்குச் செல்ல வழி வகுத்துவிடும்.
2. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழிக்கு இணங்க இச்செயலும் இருக்கும்.

அரசு தேர்வு வினாக்கள்

1 மதிப்பெண்

1. கீழ்க்கண்டவற்றுள் எது கூட்டுரு-சாரா நிறுவனமாகும்? [BEQ; Govt. MQP - 2018]

அ. கூட்டுப் பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு சங்கம்

[விடை. (ஆ) தனியாள் வணிகம்]

2. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகளில் இல்லை? [June - 2019]

அ. தனி நபர் உரிமை ஆ. வரையறு பொறுப்பு
இ. முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை
ஈ. இரகசியம் காத்தல்

[விடை. (ஆ) வரையறு பொறுப்பு]

3. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு [QY. - 2019 ; Mar. - 2020; Aug. 2022]

அ. வரையறு பொறுப்பு ஆ. வரையறாப் பொறுப்பு
இ. அமைப்பெளிமை ஈ. விரைவான முடிவு

[விடை. (ஆ) வரையறாப் பொறுப்பு]

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது? [BEQ; HY. - 2018; CRT - 2022]

அ. கூட்டுப்பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு

[விடை. ஆ. தனியாள் வணிகம்]

2 மதிப்பெண்கள்

1. எந்த வியாபார அமைப்பை சட்ட சடங்கு முறை ஏதும் இன்றி துவக்கலாம்? அதன் பொருளை கூறுக.

விடை : **தனியாள் வணிகம்** [BEQ; Govt. MQP - 2018]

பொருள் : தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும்.

2. ஒரு வணிக நிறுவனத்தின் சொத்துகள் ரூ. 1,00,000. ஆனால் அந்நிறுவனம் வெளியாட்களுக்கு தர வேண்டிய கடன் ரூ. 1,40,000. இதில் கூறப்பட்டுள்ளபடி அந்த பொறுப்பின் பெயர் என்ன? கடனீந்தோர் பின்வரும் நிறுவனங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

(I) இது தனியாள் வணிகமாக இருந்தால்

(II) அது [அ] மற்றும் [ஆ] என்பவர்கள் சமமான கூட்டாளிகளாக இருந்தால். [BEQ; Govt. MQP - 2018]

விடை : (I) தனியாள் வணிகமாக இருந்தால் அது வரையறாப் பொறுப்பு.

கடனீந்தோர் எடுக்கும் நடவடிக்கை வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள்

போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

(II) கூட்டாளியாக இருந்தால் வரையறுக்கப்பட்ட பொறுப்பு

3. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?

[அ] மளிகை [ஆ] மருந்துக்கடை

[இ] கைத்தொழில் மையம் [ஈ] சட்ட நிறுமம்

[உ] இணையதள அமைப்பு. [BEQ ; First Mid - 2018]

விடை : (i) மளிகைக்கடை, கைத்தொழில் மையம் இவை இரண்டும் தனியாள் வணிகத்திற்கு மிகவும் பொருத்தமானது.

(ii) ஏனெனில் இவ்விருத் தொழில்களுக்கும் குறைந்த அளவு முதலும், குறைந்த கல்வியறிவும் போதுமானது.

(iii) இவைகளைத் தொடங்குவதற்குக் கடினமான சட்டச் சடங்குகள் கிடையாது. ஓர் அதிகாரியிடம் உரிமம் பெற்றால் போதுமானது.

4. தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.

[BEQ; QY. & HY. - 2018; Mar. - 2020]

விடை : (i) **தனிநபர் உரிமை :** இது **தனி நபரால்** நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக செயல்படுகிறார்.

(ii) **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :** தனியாள் வணிகர், தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். அதனால் அவர் வணிகம் சார்ந்த முடிவுகளை விரைவாக எடுக்கிறார்.

(iii) **குறைந்த மூலதனம் :** தனியாள் வணிகத்தில் அவர் குறைந்த முதலீடு செய்தால் போதுமானது. தொழிலை தொடங்கலாம்.

5. சுரேஷ் சொந்தமாக ஒரு தொழில் தொடங்குகிறார் அவருடைய தந்தையும், சகோதரரும் அவருக்கு உதவியாக உள்ளனர். இது எவ்வகை வியாபார அமைப்புஎனக் கூறி அதனைப் பற்றி குறிப்பு வரைக. [May - 2022]

விடை : நிறுவனத்தின் இந்த அமைப்பு 'தனி உரிமையாளர்' என்று அழைக்கப்படுகிறது. தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும். தனிநபர் ஒருவர் தனியாகவோ அல்லது பணியாளர்களைக் கொண்டோ தொழிலை நடத்தலாம்.

6. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?

[Sep. - 2021; April-'23]

விடை : தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு, தனது சொந்த திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி, வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில், **மேலாண்மை செய்து நடத்துபவர்** தனியாள் வணிகர் ஆவார்.

7. கூட்டுரு நிறுவனங்களைப் பற்றிச் சுருக்கமாக கூறுக.

[Sep. - 2020]

விடை : (i) கூட்டுவாக்கம் பெற்ற அமைப்புகள் தனக்கென்று ஒரு சட்டத்தன்மையைப் பெற்று ஒருபுனைவு நபர் என்ற முறையில் உரிமையாளர்களிடமிருந்து தனித்து ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது. இதில் உரிமையும் மேலாண்மையும் பிரிக்கப்படுகின்றன.

(ii) உரிமையாளர்கள் மேலாண்மையில் நேரிடையாகப் பங்கேற்க இயலாது.

(எ.கா.) கூட்டுப்பங்கு நிறுமங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள்.

3 மதிப்பெண்கள்

1. சுதாகர் என்பவர் ஒரு நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தன்னுடைய குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக ஒரு மளிகைக் கடையை தொடங்க விரும்புகிறார். உங்களுடைய கருத்துப்படி அவர் எந்த வகையான வியாபாரத்தை தொடங்கலாம்? அதனுடைய நன்மைகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.

[BEQ; Govt. MQP - 2018]

விடை : சுதாகர் தனியாள் வணிகத்தை தொடங்கலாம்.

நன்மைகள் :

(i) **எளிதான அமைப்பு**

தனியாள் வணிகம் மட்டுமே வியாபார அமைப்பு வடிவங்களில் **சட்ட சடங்குமுறை ஏதுமின்றித் துவக்கலாம்.** ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியமில்லையாதலால் தொழில் முனைய விருப்பமுடையவர் எவரும் இத்தொழிலைத் தொடங்கலாம்.

(ii) **கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு**

முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பிருப்பதால் தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார். இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து அயராது உழைக்கச் செய்கிறது.

2. கோவிந்த் என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தை கணக்குகளை பராமரிக்கவும், சகோதரர் மாலையில் வாடிக்கையாளர்களைப் பார்த்துக் கொள்ள உதவினர். கோவிந்த் தந்தைக்கும், சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எவ்விதமான வியாபார அமைப்பு எனக் கூறுக. மேலும் அவ்வியாபார அமைப்பின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக. [Mar. - 2019]

விடை : இது தனியாள் வணிக அமைப்பைச் சார்ந்தது.

குறைபாடுகள் :

(i) **அளவான முதல் :**

1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.

www.surabooks.com

2. அவரின் **கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும்** மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

(ii) வரையறாப் பொறுப்பு :

1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

5 மதிப்பெண்கள்

1. பாலு என்பவர் அரசு வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் தற்போது ஓய்வு ஊதியம் பெறுபவர். அவர் தன்னுடைய மகனுக்கு எந்த ஒரு சரியான வேலையும் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஏதாவது ஒரு வேலையை பார்த்து கொடுத்தாலும் அவர் அதில் நீண்ட நாள் இருப்பதில்லை. பாலுவின் நண்பரான சபாபதி வெற்றிகரமான ஒரு தொழில் நடத்தி வருகிறார். அவர் தன்னுடைய நண்பரின் மகனுக்கு தனியாள் வணிகம் ஒன்றை அமைத்துத் தருமாறு அறிவுறுத்துகிறார்.

[BEQ; Govt. MQP - 2018]

(i) தனியாள் வணிகம் வரையறுக்க

(ii) தனியாள் வணிகத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளை விளக்குக.

விடை : (i) J.J.ஹேன்சன் என்பவரது கூற்றுப்படி, "தனியாள் வணிகம் என்பது வியாபார அலகின் ஒரு வகையாகும். அதில் ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும்".

(ii) 1. **தனி நபர் உரிமை :** இது தனி நபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இல்லாவிட்டாலும் அதன் அமைப்பு முழுவதையும் அவரே கட்டுப்படுத்துகிறார்.

2. **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :** தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். தனியாள் வணிகர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். தனி உரிமையாளர் உடனடியாகவும் முடிவு எடுக்கிறார்.

3. **வரையறாப் பொறுப்பு :** தனியார் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளை பறிமுதல் செய்ய கடனீந்தோருக்கு உரிமை உண்டு.

4. **முழு இலாபத்தையும் அனுபவித்தல் :** அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனியாள் வணிகருக்கு உண்டு. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1 மதிப்பெண்

1. தனியார் வணிகத்தில் முடிவு எடுக்கப்படுவது

அ. விரைவாக ஆ. தாமதமாக
இ. கலந்து ஆலோசித்து ஈ. எதுவுமில்லை

[விடை. (அ) விரைவாக]

2. தனியாள் வணிகத்தில் வியாபார இரகசியங்களை .... இயலும்.

அ. காக்க இயலும் ஆ. காக்க இயலாது
இ. எதுவுமில்லை ஈ. அனைத்தும்

[விடை. (அ) காக்க இயலும்]

3. தனியாள் வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டிய ....

அ. தேவையில்லை ஆ. கட்டாயமாக்கப்பட்டது
இ. விருப்பத்திற்குட்பட்டது ஈ. எதுமில்லை

[விடை. (அ) தேவையில்லை]

4. நெகிழ்வுத் தன்மை உடைய வணிகம் [BEQ]

அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்
இ. கூட்டாண்மை ஈ. கூட்டுறவு சங்கம்

[விடை. (அ) தனியாள் வணிகம்]

5. ஒரு நபர் மட்டும் முதலீடு செய்து நடத்தும் வணிகம்

அ. கூட்டாண்மை ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்
இ. தனியாள் வணிகம் ஈ. கூட்டுறவுச் சங்கம்

[விடை. (இ) தனியாள் வணிகம்]

சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

1. தனியாள் வணிகத்தில் இரகசியத்தன்மை எப்படி காப்பாற்ற இயலும்?

விடை : (i) தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராதலால் தனது தொழில் பற்றி ரகசியங்களை எளிதாகக் காப்பாற்றலாம்.

(ii) அவர், தொழில் இரகசியத்தை வெளியே கூறினால் தனக்கு நட்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் **வியாபார இரகசியம் நன்கு காக்கப்படும்.**

2. தனியாள் வணிகம் - வரைவிலக்கணம் தருக.

விடை : வீலர் என்பவரின் கூற்றுப்படி, "தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பின் ஒரு வடிவமாகும். அது தனி ஒரு மனிதனுக்குச் சொந்தமானதும் கட்டுப்பாட்டுக்குட்பட்டதுமான வியாபார அமைப்பாகும். அவர் தன் சொத்தை வணிக வெற்றி அல்லது தோல்வி என்ற துணிகரச் செயலில் ஈடுபடுத்தி இலாபத்தைப் பெறுகிறார்".

☆☆☆

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

அத்தியாயம் 5 இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை

பொருளடக்கம்

5.1. இந்து கூட்டுக் குடும்பம்

5.2. கூட்டாண்மை

5.3. கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் உள்ளடக்கம்

5.4. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்

5.5. கூட்டாளிகளின் வகைகள்

5.6. கூட்டாண்மையைப் பதிவு செய்யும் முறை

5.7. கூட்டாண்மையை பதிவு செய்யாவிடில் ஏற்படும் விளைவுகள்

5.8. கூட்டாண்மைக் கலைப்பு

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது? [CRT - 2022]

அ. முதலாளி ஆ. கர்த்தா

இ. மேலாளர் ஈ. கூட்டாளி

[விடை. (ஆ) கர்த்தா]

2. இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?

[BEQ; First Mid - 2018; QY. & HY. - 2019; July-'23]

அ. உடன்படிக்கையால் ஆ. பிறப்பால்

இ. முதலீட்டின் அடிப்படையில்

ஈ. நிர்வாகத்தின் அடிப்படையில்

[விடை. (ஆ) பிறப்பால்]

3. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்? [BEQ; QY - 2018; CRT- 2022; April-'23]

அ. கர்த்தா ஆ. கூட்டு வாரிசுதாரர்

இ. தலைமுறை ஈ. கூட்டாளிகள்

[விடை. (ஆ) கூட்டு வாரிசுதாரர்]

4. .... சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள். [Aug. - 2022]

அ. இந்துச் சட்டம் ஆ. மிட்டாக்சரா சட்டம்

இ. தயாபாகா சட்டம் ஈ. மேற்கண்ட யாவும்

[விடை. (ஆ) மிட்டாக்சரா சட்டம்]

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது.

[Sep. - 2020; May - 2022; QY-'23; Mar.-'24]

அ. ஒப்பந்தத்தால்

ஆ. கூட்டாளிகளிடையே உறவு

இ. அரசின் வழிகாட்டல்

ஈ. நட்பின் அடிப்படையில்

[விடை. (அ) ஒப்பந்தத்தால்]

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

www.surabooks.com

II. குறுவிடை வினாக்கள்

1. கர்த்தா என்பவர் யார்?

[QY. - 2019; Mar. - 2020; Aug. - 2022; July-'23]

விடை : இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது ஒரு நபர் மட்டுமே. அவர் "**கர்த்தா**" அல்லது "**மேலாளர்**" என்று அழைக்கப்படுகிறார்.

2. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?

[BEQ; QY. - 2018; Mar. & HY. - 2019; Sep. - 2021]

விடை : தயாபாகா மற்றும் மிட்டாக்சரா.

3. கூட்டாளி என்பவர் யார்? [May - 2022]

விடை : பல நபர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். கூட்டாண்மையில் ஈடுபடும் ஒவ்வொரு உறுப்பினரும் "கூட்டாளி" என அழைக்கப்படுகிறார்.

4. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்? [June - 2019; QY-'23]

விடை : இத்தகைய 'கூட்டாளி' மூலதனத்தை வழங்குவதோடு நிறுவனத்தின் இலாபநட்டத்தில் மட்டுமே பங்கேற்று வியாபாரத்தின் மேலாண்மையில் பங்கேற்காமல் இருப்பார். வெளி ஆட்களுக்கு அவர் கூட்டாளி போன்று தோன்றாமலும் கூட்டாளிகளின் வரையறாப் பொறுப்பிற்கு அவரும் ஒரு பங்கேற்பாளராகவும் இருப்பார்.

5. கூட்டாண்மைக் கலைப்பு எத்தனை வகைப்படும்?

[CRT - 2022]

விடை : கூட்டாண்மை கலைப்பு இரண்டு வகைப்படும். அவை,

(i) கூட்டாண்மை கலைப்பு

(ii) நிறுவனக் கலைப்பு

III. சிறுவிடை வினாக்கள்

1. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி. [BEQ; First Mid &QY. - 2018; June -19; Sep. - 2021; April-'23; July-'24]

விடை : (i) **இந்துச் சட்டத்தின்படி கட்டுப்படுத்துதல்:**

இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் இந்து சட்டத்தின் படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது.

(ii) **மேலாண்மை :**

இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது கர்த்தா அல்லது மேலாளர் என்று அழைக்கப்படுகிறார்.

(iii) **பிறப்பால் உறுப்பினர் :**

இக்குடும்பத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால் அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் **ஆண் குழந்தையே** குடும்ப உறுப்பினராக முடியும்.

2. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

விடை : கூட்டாண்மையின் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 2. அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை வங்கித் தொழில் 10 பிற தொழில் 20 ஆகும்.

3. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

[CRT & Aug. - 2022; HY-'23; July-'24]

விடை : கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் உடன்பாடு ஆகும்.

(i) கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

(ii) இருந்தாலும் கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருந்தால், பிற்காலத்தில் தவறான கருத்துகளினால் ஏற்படும் தகராறு மற்றும் மனக்கசப்புகளைத் தவிர்க்கலாம்.

(iii) கூட்டாண்மை வியாபாரம் சிறப்பாக நடைபெற சரியான முறையில் தயாரிக்கப்பட்ட ஒப்பாவணம், மன வேற்றுமைகளை களைந்து கூட்டாளிகளை சிறப்பாக இயங்கச் செய்கிறது.

(iv) இந்த ஒப்பாவணம் முறையாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

IV. பெருவிடை வினாக்கள்

1. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5) [Mar. & QY. - 2019; Sep. - 2021; July-'23]

விடை : (i) கூட்டாண்மையின் பெயர்.

(ii) நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை.

(iii) கூட்டாண்மையின் காலவரையறை.

(iv) கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை.

(v) கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை.

(vi) இலாப நட்டம் பகிர்வு விகிதம்.

(vii) மூலதனத்தின் மீது வட்டி.

(viii) எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம்.

(ix) கூட்டாளிகள் தரும் கடன்.

(x) கணக்கு வைப்பு.

(xi) கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு.

(xii) கூட்டாளிகள் விலகல்.

(xiii) நற்பெயர் மதிப்பிடுதல்.

(xiv) பொறுப்பு பகிர்வு.

(xv) கூட்டாண்மை கலைப்பு நடைமுறைகள்

(xvi) கூட்டாளிகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கும் முறைகளையும் மற்றும் நடுவர் தீர்ப்பிற்கு விடும் நடைமுறைகளையும் குறிப்பிடல் வேண்டும்.

2. கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)

விடை : நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு :

[HY. - 2018; CRT - 2022]

(i) **கூட்டாளிகளின் உடன்பாட்டால் :** ஒரு கூட்டாண்மை நிறுவனம் கூட்டாளிகளின் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. அனைத்து கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

www.surabooks.com

(ii) **ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை:** ஏதாவது ஒருவர் நொடிப்புநிலை அடைந்தாலோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

(iii) **சட்டத்திற்கு புறம்பான செயலால் :** கூட்டாண்மை நிறுவனத்தில் சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால் தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.

(iv) **விருப்பமுறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு :** விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஏதாவது ஒரு கூட்டாளி கடிதம் மூலம் அனைத்துக் கூட்டாளிகளுக்கும் தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

(v) **சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு :**

1. குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையின் அக்காலம் முடிவடைந்தவுடன்,
2. குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின் தொழில்கள் நிறைவு பெற்றவுடன்.
3. கூட்டாளி இறந்து விட்டால்,
4. கூட்டாளி விலகும் பொழுது,
5. கூட்டாளி நொடிப்பு நிலை அடையும் போது.

நீதிமன்றத்தால் கலைப்பு : நீதிமன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்க்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

(i) கூட்டாளி பைத்திய நிலையானால்
(ii) நிலையான திறமையின்மை
(iii) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு
(iv) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை
(v) உரிமை மாற்றம்
(vi) தொடர் நட்டம்
(vii) நீதி நேர்மை அடிப்படையில்.

3. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி. (ஏதேனும் 5)
[QY. - 2018; HY. - 2019; May - 2022; Mar.-'24]

விடை : (i) நிறுவனத்தின் பெயர்
(ii) வணிகத்தின் தலைமையிடம்
(iii) பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்.
(iv) அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி.
(v) ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள்
(vi) கூட்டாண்மையின் காலம்

மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் **பதிவுக் கட்டணம்** ₹ **3 செலுத்தி** சமர்பிக்க வேண்டும். மேற்காணும் அறிக்கையில் மாற்றம் செய்ய விரும்பினால் பதிவாளரிடம் **14 நாட்களுக்குள்** தெரிவிக்க வேண்டும்.

அரசு தேர்வு வினாக்கள்

1 மதிப்பெண்

1. எவ்வித மூலதனம் வழங்காமலும், மேலாண்மையில் பங்கேற்காமலும் உள்ள கூட்டாளி .... என அழைக்கப்படுவார். [Mar. - 2019]

அ. உறங்கும் கூட்டாளி
ஆ. பெயரளவு கூட்டாளி
இ. முரண்தடைக் கூட்டாளி
ஈ. இரகசியக் கூட்டாளி

[விடை. (ஆ) பெயரளவு கூட்டாளி]

2. வரையறுக்கப்பட்ட பொறுப்புச் சட்டம் அரசு இதழில் வெளியிடப்பட்ட ஆண்டு? [BEQ; First Mid - 2018]

அ. 2008 ஆ. 2010
இ. 2000 ஈ. 2002

[விடை. (அ) 2008]

3. "தனிப்பட்ட இலாபங்களுக்காக ஒரு வியாபாரத்தை நடத்த ஒப்புக்கொண்ட நபர்களுக்கிடையே நிலவும் உறவே கூட்டாண்மையாகும்" என கூறியவர். [BEQ; First Mid - 2018]

அ. ஸ்பிரிகில்ஸ் ஆ. J. J. ஹேன்சன்
இ. பேராசிரியர் ஹேனே ஈ. வீலர்

[விடை. (இ) பேராசிரியர் ஹேனே]

4. கூட்டாளிகளின் கீழ்க்கண்ட உரிமைகளை கவனி: [BEQ; Govt. MQP - 2018]

(1) வியாபாரத்தில் பங்கு பெறும் உரிமை
(2) இலாபத்தில் பங்கேற்கும் உரிமை
(3) கடனுக்கு வட்டி பெறும் உரிமை
(4) கடன் பெறும் உரிமை

கூட்டாளிகளின் சட்டபடியான உரிமையானது?

அ. (1) மற்றும் (4) ஆ. (2) மற்றும் (4)
இ. (1), (2) மற்றும் (3) ஈ. (1), (3) மற்றும் (4)

[விடை. (இ) (1), (2) மற்றும் (3)]

5. கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க. [BEQ; Govt. MQP - 2018]

கூற்று (A) : அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் ஒரு கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

காரணம் (R) : ஒரு கூட்டாண்மை நிறுவனம் கூட்டாளிகளின் உடன்பாட்டால் உருவாக்கப்படுவது போலவே உடன்பாட்டால் கலைக்கப்படலாம்.

www.surabooks.com

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

இ. (A) சரி, ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு, ஆனால் (R) சரி

[விடை. (ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.]

6. கூட்டாண்மை பதிவு [QY. - 2018; June - 2019; Sep. - 2021]

அ. கட்டாயம்

ஆ. விருப்பத்தின் பேரில்

இ. அவசியமில்லை

ஈ. இவற்றில் எதுவுமில்லை

[விடை. (ஆ) விருப்பத்தின் பேரில்]

7. கூட்டாண்மை ஒப்பாவணத்தை இவ்வாறும் அழைக்கலாம் .... [BEQ; Govt. MQP - 2018; QY. - 2019]

அ. சங்க நடைமுறை விதிகள்

ஆ. கூட்டாண்மை சங்க நடைமுறை விதிகள்

இ. கூட்டாண்மைச் சட்டம்

ஈ. கூட்டாண்மை

[விடை. (ஆ) கூட்டாண்மை சங்க நடைமுறை விதிகள்]

3 மதிப்பெண்கள்

1. கூட்டாளியின் வகைகள் யாவை? எவையேனும் மூன்றினை விளக்குக. [BEQ; First Mid - 2018]

விடை : கூட்டாளியின் வகைகள் :

1) உழைக்கும் கூட்டாளி
2) உழையா கூட்டாளி
3) பெயரளவுக் கூட்டாளி
4) இரகசியக் கூட்டாளி
5) இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி
6) முரண்தடைக் கூட்டாளி
7) உரிமைப்போலிக் கூட்டாளி
8) இளவர் கூட்டாளி

1) உழைக்கும் கூட்டாளி :

(i) தொழிலில் முதலீடு செய்து, தொழிலை நிர்வகிக்கும் அல்லது மேலாண்மை செய்யும் கூட்டாளி "உழைக்கும் கூட்டாளி" ஆவார்.

(ii) இவர் "பணிபுரியும் கூட்டாளி" மேலாண்மைக் கூட்டாளி "பொதுக் கூட்டாளி", "ஊதியம் பெறும் கூட்டாளி" எனவும் அழைக்கப்படுகிறார்.

2) பெயரளவுக் கூட்டாளி :

(i) இவர் தொழிலில் முதலிடுவதும் இல்லை, மேலாண்மையில் பங்கேற்பதும் இல்லை.

(ii) ஆனால் தனது பெயரை மட்டும் தொழிலில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறார்.

(iii) இவரே "**பெயரளவு கூட்டாளி**" அல்லது "**பாசாங்கு கூட்டாளி**" ஆவார்.

3) இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி :

(i) இவருக்கு இலாபத்தில் மட்டும் பங்கு உண்டு நட்டத்தில் பங்கேற்பதில்லை.

(ii) இவர் மேலாண்மையில் பங்குபெற முடியாது.

(iii) மூன்றாம் நபர்களுக்கு இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பு ஆகும்.

2. கலைவாணி என்பவரின் தாத்தா ஒரு துணிக்கடையை நடத்தி வருகிறார். அதில் அவருடைய தந்தையாரும் ஒரு உறுப்பினராவார். அப்பெற்றோர்களுக்கு அவர் ஒரே மகள் ஆவார். [BEQ; Govt. MQP - 2018]

(i) அவருக்கு அத்தொழிலில் ஈடுபடும் தகுதி உள்ளதா?

(ii) அத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுக.

(iii) அதன் சிறப்புக் கூறுகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

விடை : (i) ஆம் அவருக்கு அத்தொழிலில் ஈடுபடும் தகுதி உள்ளது.

(ii) இந்து கூட்டுக்குடும்ப வியாபாரம்

(iii) 1. **பிறப்பால் உறுப்பினர் :**

இக்குடும்பத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால் அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும். உறுப்பினராக எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.

2. **நீடித்த வாழ்வு :**

குடும்ப உறுப்பினரின் மரணம், நொடிப்பு நிலை, மனச்சமநிலை இழப்பு ஆகியவை வியாபாரத்தைப் பாதிக்காது. அவ்வியாபாரம் தொடர்ந்து மற்ற குடும்ப உறுப்பினர்களால் நடைபெறும்.

3. இந்து கூட்டுக் குடும்பத் தொழில் என்றால் என்ன? [BEQ; First Mid - 2018]

விடை : "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒன்றாகவே வாழ்ந்து அக்குடும்பத்தின் சொத்துக்களை ஒன்றாக முதலீடு செய்து தொழிலை மேற்கொண்டு, அதிலிருந்து கிடைக்கின்ற இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்டு வாழும் குடும்பமே இந்து கூட்டுக் குடும்பம் என்றழைக்கப்படுகின்றது.

4. கூட்டாண்மை இலக்கணம் வரைக. [Sep. - 2020]

விடை : 1932–ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் பிரிவு 4 பின்வருமாறு கூட்டாண்மைக்கு வரைவிலக்கணம் வழங்குகிறது! "கூட்டாண்மை என்பது எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" என்று கூறுகிறது.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

5 மதிப்பெண்கள்

1. பழனி என்பவர் ஒரு கட்டுமானப் பொறியாளர். அவரை இரண்டு கட்டிட ஒப்பந்தத்தாரர்கள் சந்தித்தார்கள். கட்டிடம் கட்டி விற்பதற்கு அவரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினார்கள். முதலீடும் அவர்களே செய்வதாக ஒப்புக்கொண்டு இலாபத்தில் நான்கில் ஒரு பகுதியை பொறியாளருக்கு பழனி தருவதாக ஒப்புக் கொள்கின்றனர். [BEQ; Govt. MQP - 2018]

(i) இது எந்த வகையான தொழிலாகும்?

(ii) அதனுடைய சிறப்பியல்புகளில் ஏதேனும் நான்கினை விளக்குக.

விடை : (i) **கூட்டாண்மை**

(ii) **அ. உடன்பாட்டு உறவு**

1. கூட்டாண்மை என்பது **உடன்படிக்கையால் ஏற்படும் உறவாகும்.**
2. தகுதி உடையவர்கள் மட்டுமே சட்டப்படி கூட்டாளியாக இருக்க முடியும்.
3. மற்றவர்களால் (உதாரணமாக இளவர்) கூட்டாண்மையினை அமைக்க முடியாது.

ஆ. பல நபர்கள்

1. உடன்படிக்கையின் மூலம் ஏற்பட்ட உறவே கூட்டாண்மை.
2. இதை ஏற்படுத்த குறைந்தபட்சம் 2 நபர்கள் (வங்கித் தொழிலாயின் 10 நபர்கள் மட்டுமே. மற்ற தொழில்களுக்கு 20 நபர்கள் ஆகும்.)

இ. வணிகத் தன்மை

1. சட்டபூர்வமாக நடத்தக்கூடிய வணிகம் அல்லது தொழிலை உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்தும் அமைப்பே கூட்டாண்மை ஆகும்.
2. கூட்டாண்மை அமைப்பு இல்லையென்றால் வியாபாரம் இல்லை.
3. சுருங்கக்கூறின் கூட்டாண்மை ஒரு குழுவோ அல்லது தர்ம சிந்தனை உள்ள தொண்டு நிறுவனமோ அல்ல.

ஈ. இலாபப் பகிர்வு

1. கூட்டாண்மை வணிகத்தின் மூலம் சம்பாதித்த இலாபத்தை அனைத்துக் கூட்டாளிகளும் பங்கிட்டுக் கொள்கிறார்கள்.
2. மனிதநேயமுள்ள நடவடிக்கைகள் மூலம் உடன்பாடு ஏற்படுத்துவதில்லை.
3. மாறாக இலாபத்தையே நோக்கமாக கொண்டு கூட்டாண்மை நிறுமம் செயல்படுகிறது.

2. கூட்டாண்மையில் ஒரு இளவரை கூட்டாளியாகச் சேர்க்கலாம்? ஏன்? [June - 2019]

விடை : ஆம் ஒரு இளவரை கூட்டாண்மையில் கூட்டாண்மை நலனிற்காகவும், இளவரின் நலனிற்காகவும் மட்டுமே கூட்டாளியாக சேர்க்க முடியும்.

(i) இந்திய பெரும்பான்மைச் சட்டம், **18 வயதை பூர்த்தி அடையாத நபரை** இளவர் என்று அழைக்கப்படுகிறார்.

(ii) 18 வயது பூர்த்தி அடைந்தாலும் 21 வயது பூர்த்தியாகும் வரை பாதுகாவலரை துணைக் கொள்ள வேண்டும்.

(iii) இருந்தாலும் கூட்டாண்மை பயன்களுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவர். ஆனால் இளவருக்கு உடன்படிக்கை ஏற்படுத்தும் உரிமையில்லை.

(iv) அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்துடன் மட்டுமே இளவரை கூட்டாளியாக சேர்க்க இயலும்.

(v) கூட்டாண்மையில் கூட்டாண்மையின் நலனிற்காகவும், இளவரின் நலனிற்காகவும் மட்டுமே கூட்டாளியாக முடியும்.

3. கூட்டாளியின் வகைகள் யாவை? எவையேனும் ஐந்து கூட்டாளிகளின் வகைகளை விளக்குக. [Sep. - 2020]

விடை : கூட்டாளிகளை எட்டு வகையாக பிரிக்கலாம்.

1. உழைக்கும் கூட்டாளி :

(i) தொழிலில் முதலீடு செய்து, தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கூட்டாளிக்கு, உழைக்கும் கூட்டாளி என்று பெயர்.

(ii) தொழிலை மேலாண்மை செய்யும் உரிமை, இவருக்கு உண்டு.

2. உறங்கும் கூட்டாளி அல்லது உழையா கூட்டாளி :

(i) தொழிலில் முதலிட்டு, மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளிக்கு, உறங்கும் கூட்டாளி அல்லது உழையா கூட்டாளி என்று பெயர்.

(ii) ஆனால், இவர் நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்பார்.

(iii) வெளியாட்களுக்கு, அவர் கூட்டாளி போன்று தோன்றாமல் பார்த்துக் கொள்வார்.

3. பெயரளவு கூட்டாளி :

(i) தொழிலில் முதலிடாமலும், மேலாண்மையில் பங்கேற்காமலும் உள்ள கூட்டாளிகளுக்கு பெயரளவு கூட்டாளி என்று பெயர்.

(ii) நிறுவன நற்பெயருக்காகவும், மரியாதைக்காகவும் தனது பெயரை மட்டுமே கடனாக வழங்குகிறார்.

(iii) இவரின் வரையறாப் பொறுப்பு, மூன்றாவது நபரின் கடனிற்கு உண்டு.

4. இலாபத்தில் மட்டுமே பங்கேற்கும் கூட்டாளி :

(i) இலாபத்தில் மட்டுமே பங்கேற்று, நட்டத்தில் பங்கேற்காத கூட்டாளிக்கு, இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி என்று பெயர்.

(ii) ஆனால், இவரின் வரையறாப் பொறுப்பு, மூன்றாவது நபரின் கடனிற்கு உண்டு.

5. முரண்தடைக் கூட்டாளி :

(i) இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.

(ii) தானும் ஒரு கூட்டாளி என நம்பச் செய்கிறார்.

(iii) இதை நம்பி சிலர் நிறுவனத்திற்கு கடன் கொடுப்பார்.

(iv) இவர் அவர்களுக்கு பொறுப்பாகிறார்.

6. உரிமைப்போலிக் கூட்டாளி :

(i) இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.

(ii) நிறுவனம் இவரைக் கூட்டாளி எனச் சொல்லும்.

(iii) இதை, அவர் மறுத்துரைக்க வேண்டும்.

(iv) இல்லையெனில், கூட்டாண்மையுடன் தொடர்புடையவர்களுக்கு பொறுப்பாகிறார்.

www.surabooks.com

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக — 1 மதிப்பெண்

1. கூட்டாண்மை பதிவுச் சட்டம்

அ. 1956 ஆ. 1952
இ. 1932 ஈ. 1955

[விடை. (இ) 1932]

2. கூட்டாண்மையில் வங்கித் தொழில் அல்லாத பிற தொழில்களாக இருந்தால் உறுப்பினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை.

அ. 2 ஆ. 10
இ. 20 ஈ. 15 [விடை. (இ) 20]

3. ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது செயலை செய்வதற்காக தற்காலிகமாக தொடங்கப்பட்ட கூட்டாண்மை......

அ. விருப்பமுறி கூட்டாண்மை
ஆ. குறிப்பிட்ட கூட்டாண்மை
இ. வரையறுத்த கூட்டாண்மை
ஈ. இணைவினைக் கூட்டாண்மை

[விடை. (ஆ) குறிப்பிட்ட கூட்டாண்மை]

4. கூட்டாண்மையை .... பதிவு செய்யலாம்.

அ. நிறுமப் பதிவாளர் ஆ. கூட்டுறவுப் பதிவாளர்
இ. கூட்டாண்மைப் பதிவாளர்
ஈ. மாவட்ட ஆட்சியர்

[விடை. (இ) கூட்டாண்மைப் பதிவாளர்]

குறுவிடை வினாக்கள் — 2 மதிப்பெண்கள்

1. கூட்டாளிகளிடையே நிலவும் உறவுமுறை யாது?

விடை : (i) கூட்டாண்மையின் கூட்டாளிகளுக்கிடையே **முகவர் மற்றும் முதல்வர்** என்ற உறவு உள்ளது.

(ii) ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும் அதே சமயத்தில் முகவராகவும் செயல்படுகிறார்கள்.

(iii) அனைத்து கூட்டாளிகளும் இணைந்தோ அல்லது அனைத்து கூட்டாளிகளுக்குப் பதிலாக யாராவது ஒருவரோ தொழிலை நடத்தலாம்.

(iv) எனவே, கூட்டாண்மையை **முகமைக்கோட்டின் விரிவாக்கம்** என்று வர்ணிக்கப்படுகிறது.

2. கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவத்தில் இருத்தல் நல்லது ஏன்?

விடை : (i) கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டின் காரணமாக கூட்டாண்மை ஏற்படுத்தப்படுகிறது.

(ii) உடன்பாடு **எழுத்துவடிவிலோ** அல்லது **பேச்சு வடிவிலோ** இருக்கலாம்.

(iii) எழுத்து வடிவத்தில் உள்ள உடன்பாடு, பிற்காலத்தில் கூட்டாளிகளுக்கிடையே எழும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க உதவும்.

3. இளவர் கூட்டாளி என்பவர் யார்?

விடை : இந்திய பெரும்பாண்மைச் சட்டம், 18 வயதை பூர்த்தி அடையாத ஒரு நபரை 'இளவர்' என்று அழைக்கப்படுகிறார். 18 வயதை பூர்த்தி அடைந்தாலும் 21 வயது வரை பாதுகாவலரைத் துணைக் கொள்ள வேண்டும். இருந்தாலும் கூட்டாண்மையின் பயன்களுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

சிறுவிடை வினாக்கள் — 3 மதிப்பெண்கள்

1. இந்து கூட்டுக் குடும்பத்தில் கர்த்தாவின் பொறுப்பை விவரி.

விடை : (i) கர்த்தாவின் பொறுப்பு – வரையறாப் பொறுப்பு

(ii) கூட்டு வாரிசுதாரர்களின் பொறுப்பு – வரையறு பொறுப்பு.

(iii) சொத்துக்களை நிர்வகிப்பது, குடும்பத்திலுள்ள மணமாகாதவர்களுக்கு திருமணம் செய்து வைப்பது, குடும்பத்தின் சார்பாக வரி செலுத்துவது போன்றவைகள் கர்த்தாவின் பொறுப்பாகும்.

2. கூட்டு வாரிசுதாரர் என்பவர் யார்?

விடை : இந்துக் கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் கூட்டு வாரிசுதாரர் என்று அழைக்கப்படுவர். இந்துக் கூட்டுக் குடும்ப முறையில் உறுப்பினர்கள், தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர். இக்குடும்பத்தில் பிறந்த அனைவரும் அல்லது இக்குடும்ப உறுப்பினர்களில் ஒருவரை திருமணம் செய்தவர் ''கூட்டு வாரிசுதாரர்'' ஆவார்.

3. இரகசிய கூட்டாளி என்பவர் யார்?

விடை : இரகசிய கூட்டாளி என்பவர் பொதுமக்களுக்குத் தெரியாமல் அந்நிறுவன உறுப்பினராக இருப்பவர் மற்ற கூட்டாளிகளுக்கு உள்ளதைப் போன்றே, இவரும் கடனிற்கு பொறுப்பாளியாவார்.

4. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன?

விடை : **கூட்டுப் பொறுப்பு :**

கடனீந்தோர் தங்களுக்குச் சேர வேண்டிய மொத்த கடன் தொகையையும் அனைத்துக் கூட்டாளிகளின் தனிச்சொத்துக்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இது கூட்டாளிகளின் கூட்டுப் பொறுப்பாகும்.

தனிப்பொறுப்பு :

கடனீந்தோர் தங்களுக்குச் சேரவேண்டிய கடன் தொகையை ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்துக்கள் மீது வழக்குத் தொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இது கூட்டாளியின் தனிப் பொறுப்பாகும்.

www.surabooks.com

www.surabooks.com

பெருவிடை வினாக்கள் 5 மதிப்பெண்கள்

1. கர்த்தாவின் உட்கிடை ஆணையுரிமை என்றால் என்ன?

விடை : (i) இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தைக் கட்டுப்படுத்தி, மேலாண்மைசெய்து வருபவர் கர்த்தா ஒருவரே.

(ii) இவருக்குக் கீழ்க்காணும் உட்கிடை ஆணை உரிமை (அதிகாரங்கள்) உண்டு.

(iii) வியாபாரத்தின் நலனுக்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் வியாபாரத்தின் சொத்துக்களை அடமானம் வைக்கும் உட்கிடை ஆணை உரிமை (அதிகாரம்) உண்டு.

(iv) அவரது விருப்பத்திற்கேற்ப தொழிலை நிர்வாகம் செய்யும் அதிகாரம் உண்டு.

(v) சொத்துக்களை பராமரிக்க, வாங்க, அதிகாரம் உண்டு.

(vi) வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய கர்த்தாவுக்கு அதிகாரம் உண்டு.

(vii) வியாபாரத்தில் கிடைக்கும் வருமானத்தைத் தானே பெற்றுக் கொள்ளும் அதிகாரம் உண்டு.

(viii) வியாபாரத்தில் கிடைக்கும் வருமானத்தை யார் வேண்டுமெனிலும் வசூலிக்கலாம். ஆனால் அதை கர்த்தாவிடம் ஒப்படைக்க வேண்டும்.

(ix) வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சனைகளை, சமரசம் செய்ய, தீர்க்க அதிகாரம் உண்டு.

2. கூட்டாண்மைக் கலைப்பிற்கும் நிறுமக் கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி.

விடை :

எண்	தலைப்பு	கூட்டாண்மைக் கலைப்பு	நிறுமக் கலைப்பு
1.	உறவு முறிவு	ஒரு அல்லது சில கூட்டாளிகள் கூட்டாண்மையில் தங்களுக்கு உள்ள உறவை முறித்துக் கொள்வது.	அனைத்துக் கூட்டாளிகளும் கூட்டாண்மையால் தங்களுக்கு உள்ள உறவை முறித்துக் கொள்வது.
2.	முடிவுக்கு வருதல்	தொழிலை முடிவுக்குக் கொண்டு வரலாம் அல்லது தொடரலாம்.	கட்டாயம் தொழில் முடிவுக்கு வந்துவிடும்.
3.	தொடர்ந்து நடைபெறுதல்	கூட்டாண்மை கலைப்பிற்குப் பின் தொழிலைத் தொடர்ந்து நடத்த இயலும்.	நிறுவனக் கலைப்பிற்குப் பின் தொழிலைத் தொடர்ந்து நடத்த இயலாது.
4.	கலைப்பு ஏற்படுதல்	கூட்டாண்மைக் கலைப்பினால் நிறுவனக் கலைப்பு ஏற்படுவதில்லை.	நிறுவனக் கலைப்பினால் கூட்டாண்மைக் கலைப்பு ஏற்படும்.

☆ ☆ ☆

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

அத்தியாயம் 6 கூட்டுப் பங்கு நிறுமம்

பொருளடக்கம்

6.1.	நிறுமம் – பொருள் மற்றும் இலக்கணம்
6.2.	நிறுமத்தின் வகைகள்
6.3.	அமைப்பு முறையேடு
6.4.	செயல்முறை விதிகள்
6.5.	தகவலறிக்கை

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?[QY. - 2019; Mar.-'24]

அ. தகவலறிக்கை
ஆ. சங்க நடைமுறை விதிகள்
இ. அமைப்பு முறையேடு
ஈ. கூட்டுருவாக்கச் சான்றிதழ்

[விடை. (இ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்]

2. நிறுமச் சட்டத்தின் அட்டவணை - அ [Table A] என்பது

[Sep. - 2020; CRT & May - 2022; HY-'23]

அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி
ஆ. இருப்புநிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
இ. நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

[விடை. (இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி]

3. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது? [Mar. - 2020; CRT & Aug. - 2022; July-'23 & '24]

அ. பட்டய (சாசன) நிறுமம்
ஆ. அயல்நாட்டு நிறுமம்
இ. அரசு நிறுமம்
ஈ. சட்டமுறை நிறுமம்

[விடை. (ஈ) சட்டமுறை நிறுமம்]

4. நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?

[Govt. MQP; First Mid & QY. - 2018; Mar. - 2019; April-'23]

அ. கடனீந்தோர்
ஆ. கடனாளர்
இ. கடனீட்டு பத்திரதாரர்
ஈ. பங்குதாரர்கள்

[விடை. (ஈ) பங்குதாரர்கள்]

5. ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள்.................. எனப்படும்.[HY. - 2019; CRT - 2022]

அ. பட்டய (அ) சாசன நிறுமங்கள்
ஆ. சட்டமுறை நிறுமங்கள்
இ. பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்
ஈ. அயல்நாட்டு நிறுமங்கள்

[விடை. (அ) பட்டய (அ) சாசன நிறுமங்கள்]

II. குறுவிடை வினாக்கள்

1. நிறுமத்தின் பல்வேறு வகைகள் யாவை? [First Mid - 2018]

விடை : (i) **கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில் :**
அ. பட்டய நிறுமம், சட்டமுறை நிறுமம்
ஆ. இலாப நோக்கமில்லா நிறுமம்.

(ii) **உறுப்பினர்களின் அடிப்படையில் :**
அ. பொது நிறுமம்
ஆ. தனியார் நிறுமம்.

(iii) **பொறுப்பின் அடிப்படையில் :**
அ. பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமம்.
ஆ. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம்.
இ. வரையறாப் பொறுப்பு நிறுமம்.

(iv) **கட்டுப்பாட்டின் அடிப்படையில் :**
அ. அரசு நிறுமம்
ஆ. பிடிப்பு நிறுமம்
இ. துணை நிறுமம்

(v) **தேசிய இனத்தின் அடிப்படையில் :**
அ. உள்நாட்டு நிறுமம்
ஆ. அயல்நாட்டு நிறுமம்
இ. பன்னாட்டு நிறுமம்.

2. நிறுமம் வரைவிலக்கணம் தருக.

விடை : ஜேம்ஸ் ஸ்டிபன்சன் என்பவரின் கூற்றுப்படி, "நிறுமம் என்பது பல நபர்கள் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதற்கு மூலதனத்தை வழங்கி அல்லது மூலதனத்தின் மதிப்பிலான பொருட்களை வழங்கி, சில வணிகம் அல்லது வியாபாரத்தைத் தொடங்கி அதிலிருந்து கிடைத்த இலாப நட்டத்தை (உள்ளவாறு) அவர்கள் பகிர்ந்து கொள்வதாகும்".

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

3. வரையறு பொறுப்பு என்றால் என்ன? [HY. - 2019;CRT - 2022]

விடை : பங்குதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு பங்குதாரர்களின் பொறுப்பும் அவர் வைத்துள்ள பங்குகளின், செலுத்தப்படாத தொகைக்கு மட்டும் வரையறை செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் கடனுக்கு அதன் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் அதன் கடனீந்தோர் நிறும உறுப்பினர்களின் சொந்த சொத்துக்களைக் கைப்பற்ற முடியாது. நிறுமப் பங்கு முதலில் அழைப்பு விடுக்கப்படாத தொகைக்கு மட்டுமே பொறுப்பாவார்.

4. நிறுமத்தின் ஏதேனும் இரண்டு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

விடை : (i) தனியான சட்ட நபர் தன்மையுடையது. [Mar.-'24]

(ii) வரையறு பொறுப்பு

5. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?

[QY.-2018 & '23; HY. - 2018; Sep. - 2020; July-'24]

விடை : ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகிறது. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின்படி இவை செயல்படும்.

III. சிறுவிடை வினாக்கள்

1. நிறுமத்தின் ஏதேனும் மூன்று நன்மைகளை விவரி.

விடை : (i) **பேரளவு மூலதனம் :** [First Mid - 2018]

தனியார் வணிகம் மற்றும் கூட்டாண்மையைக் காட்டிலும் நிறுமத்திற்குப் பேரளவு மூலதனத்தைத் திரட்ட இயலும். பேரளவு மூலதனம் என்பது, பெரிய அளவு மூலதனத்தைத் திரட்டி அவற்றை பெரிய தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதாகும்.

(ii) **வரையறுக்கப்பட்ட பொறுப்பு :**

பங்குதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும். பங்குதாரரின் இடர் என்பது பங்குகளின் முகமதிப்பில் செலுத்தப்படாத தொகைக்கு மட்டுமே பொறுப்பாகும்.

(iii) **பங்குகள் மாற்றம் :**

இரண்டு தனிப்பட்ட நபர்கள் இடையே பங்குகள் மாற்றம் என்பது எளிது. ஆகவே முதலீடு என்பது எளிமையான ஒன்றாகும். ஒரு பங்குதாரர் பங்குகளை எளிதாக வாங்கவும், விற்று பணமாக்கவும் முடியும்.

2. அரசு நிறுமம் என்றால் என்ன? [QY. - 2019 & '23; Sep. - 2020]

விடை : (i) பொதுத்துறை நிறுவனங்களை 1956 ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்தால், அது அரசு நிறுமம் எனப்படும். இவ்வகை நிறுமங்கள், மத்திய அரசு அல்லது மாநில அரசுகளுக்குச் சொந்தமானது.

(ii) 1956-ஆம் ஆண்டு இந்திய நிறுமச்சட்டம் பிரிவு 617, அரசு நிறுமங்கள் என்பது **51% க்கு மேலாக** (செலுத்தப்பட்ட மூலதனம்) மத்திய அரசு, மத்திய (அ) மாநில அரசு, பகுதி மத்திய அரசு மற்றும் பகுதி ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில அரசு வைத்திருந்தால், அது அரசு நிறுமங்கள் ஆகும்.

(iii) (எ.கா.) இந்திய இரும்பு எஃகு ஆணையம், இந்திய எண்ணெய்க் கழகம், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம், பாரத மிகு மின் நிறுவனம் ஆகும்.

3. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?

[QY. - 2019; CRT & May - 2022]

விடை : அயல் நாட்டு நிறுமம் என்பது ஒரு நிறுமம் **இந்தியாவிற்கு வெளியில் வேறுநாடுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுமத்தைக்** குறிக்கும். அவை அயல்நாட்டு நிறுமம் எனப்படும். இந்தியாவில் நிறுமத்தை அமைப்பதற்குப் பின்வரும் ஆவணங்களைக் கண்டிப்பாக நிறுமப் பதிவாளர்களிடம் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். அவையாவன,

(i) சாசனத்தின் சான்றிதழ் நகல் அல்லது கூட்டுருவாக்கச் சான்றிதழ் (அ) அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை வழிகள், ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ii) நிறுமத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடம்

(iii) இயக்குநர் மற்றும் செயலரின் பட்டியல்.

(iv) இந்தியாவின் தலைமை வியாபார அலுவலகத்தின் முகவரி.

(v) நிறுமத்தின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் வழங்கிய இந்திய குடிமகனின் பெயர் மற்றும் முகவரி.

IV. பெருவிடை வினாக்கள்

1. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)

[Govt. MQP - 2018; Mar. - 2020; Aug. - 2022; April & QY -'23]

விடை : (i) **பெயர் குறித்த உட்பிரிவு :**

1. பெயர் குறித்த உட்பிரிவில் ஒரு நிறுவனத்திற்குச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்.
2. ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது.
3. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களுக்கு பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால் நிறுமத்தின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும்.

(ii) **இடங்குறித்த உட்பிரிவு :**

1. இப்பிரிவு நிறுமத்தின் பதிவு அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்பது பற்றித் தெரிவிக்கிறது.
2. தொழில் தொடங்குவதற்கு முன்பே நிறுமத்தின் பதிவு அலுவலகம் இருக்கும் இடத்தை தெரிவிக்க வேண்டும்.

(iii) **நோக்கம் குறித்த உட்பிரிவு :**

நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பங்குதாரர்களின் தேவைகளையும் மற்றும் நிதி ஆதாரத்தையும் பயன்படுத்துவது குறித்தும் இதில் விவரங்கள்இருக்கும்.

(iv) **பொறுப்புக் குறித்த உட்பிரிவு :** பொறுப்புக் குறித்த உட்பிரிவு என்பது பொறுப்புறுதி நிறுமமாயின் அது கலைப்பிற்குள்ளாக நேரிடும்போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளைத் தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வோர் உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

(v) **முதல் குறித்த உட்பிரிவு :**

1. முதல் பிரிவு என்பது நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் ஆகியவை பற்றி விவரிக்கிறது.
2. நிறுமத்தின் சொத்துகள் பற்றியும் இப்பிரிவு குறிப்பிடுகிறது.

(vi) **அமைப்பு குறித்த உட்பிரிவு :**

1. பங்குதாரர்கள் தாங்கள் ஒன்றிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும் தங்களின் விருப்பத்தை இப்பிரிவு வெளிப்படுத்துகிறது.
2. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும் அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும்.

2. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5) [First Mid - 2018; HY. - 2019;CRT & May -2022; July-'24]

விடை : செயல்முறை ஏடு என்பது கூட்டுப்பங்கு நிறுமத்தை எப்படி அன்றாடம் நடத்திச் செல்வது என்ற விவரத்தைத் தாங்கிய ஏடு. இதில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இருக்கும்.

(i) பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.

(ii) ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம், பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.

(iii) பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.

(iv) பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.

(v) பங்கு மாற்றம் குறித்த விதிகள்

(vi) பங்காதாயம் அறிவித்தல்

(vii) நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்.

(viii) இயக்குநர்களின் நியமனம் ஊதியம் மற்றும் நீக்கம்.

(ix) கூட்டங்களை நடத்துதல் பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்.

(x) நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்.

(xi) நிறுமத்தின் பொதுமுத்திரை.

(xii) நிறுமக் கலைப்பு தொடர்பான நடைமுறைகள்.

3. பன்னாட்டு நிறுமம் என்றால் என்ன?

விடை : பன்னாட்டு நிறுமங்கள் என்பது (MNC) மிகப்பெரிய தொழிலமைப்பாகும். அவ்வமைப்பு பின்வருமாறு செயல்படும்.

(i) இதன் செயல்பாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செயல்பட வேண்டும்.

(ii) பல நாடுகளில் இதன் உற்பத்தி, சந்தையியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் என உலகளவில் நடைபெறுகிறது.

(iii) தனது இலாபத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து ஈட்டுகின்றது.எ.கா. மைக்ரோ சாப்ட் நிறுவனம், நோக்கியா நிறுவனம், நெஸ்ட்லே, கோகோ கோலா, IBM, பெப்சிக்கோ, சோனி கார்ப்பரேஷன்.

அரசு தேர்வு வினாக்கள்

1 மதிப்பெண்

1. கூட்டுப் பங்கு நிறுமத்தின் பண்புகளாவன [Govt. MQP - 2018; QY-'23]

(I) தனியான சட்ட நபர் தன்மையுடையதல்ல
(II) வரையறு பொறுப்பு
(III) நீடித்த வாழ்வு இல்லை
(IV) பொது முத்திரை

அ. (I) மற்றும் (II) ஆ. (II) மற்றும் (IV)
இ. (I) மற்றும் (IV) ஈ. (II) மற்றும் (III)

[விடை. ஆ. (II) மற்றும் (IV)]

2. ஒரு பொது நிறுமத்தின் அமைப்பு முறையேட்டில் குறித்த உட்பிரிவில் கீழ்கண்டவற்றில் இடம்பெறுவது யாது? [Govt. MQP - 2018]

(i) பொது நோக்கங்கள்
(ii) முக்கிய நோக்கங்கள்
(iii) துணை நோக்கங்கள்
(iv) தற்செயல் நோக்கங்கள்
(v) இதர நோக்கங்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) (i), (ii) மற்றும் (iv) (ஆ) (ii), (iv) மற்றும் (v)
(இ) (i), (ii) மற்றும் (iii) (ஈ) (ii), (iii) மற்றும் (v)

[விடை. (ஈ) (ii) (iii) மற்றும் (v)]

3. ஒரு பங்கு - ஒரு வாக்கு என்பது ___________ வாக்கெடுப்பு தத்துவமாகும். [CRT - 2022]

அ. கூட்டாண்மை ஆ. கூட்டுறவு சங்கம்
இ. நிறுமம் ஈ. தனியாள் வணிகம்

[விடை. இ. நிறுமம்]

2 மதிப்பெண்கள்

1. பொது நிறுமத்தின் ஏதேனும் இரண்டு சிறப்புக் கூறுகளை எழுதுக. [Govt. MQP - 2018]

விடை : (i) குறைந்தபட்ச **7 உறுப்பினர்களைக்** கொண்டது.

(ii) குறைந்தபட்ச செலுத்தப்பட்ட மூலதனம் ₹.5,00,000/- ஆகும்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

3 மதிப்பெண்கள்

1. கூட்டுப் பங்கு நிறுமம் பற்றி குறிப்பு வரைக. [HY. - 2018]

கூட்டுப் பங்கு நிறுமம் :

விடை : நிறுமம் : இந்திய நிறுமச் சட்டம் 2013, பிரிவு 2-ன், "நிறுமம் என்பது நீடித்த வாழ்வுடனும், நிலைபேற்றுத் தொடர்ச்சியுடனும், பொது முத்திரையுடன் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்".

2. கீழ்கண்ட வாக்கியங்கள் எந்த வணிக அமைப்பிற்கு பொருத்தமானது? [Govt. MQP - 2018]

(i) நிலையான மற்றும் தொடர்ச்சி தன்மை கொண்ட வணிக அமைப்பு.

(ii) பாரம்பரிய சொத்துக்களைப் பயன்படுத்தி தொழில் செய்யும் அமைப்பு.

(iii) குறைவான செலவுகளுடன் தொழிலைத் தொடங்கும் அமைப்பு.

விடை : (i) கூட்டுப்பங்கு நிறுமம்

(ii) இந்துக் கூட்டுக் குடும்ப வணிகம்

(iii) தனியாள் வணிக அமைப்பு

5 மதிப்பெண்கள்

1. தகவலறிக்கை என்றால் என்ன? [HY. - 2018]

விடை : நிறுமச் சட்டம் பிரிவு 2(26) தகவலறிக்கைக்கு பின் வருமாறு வரைவிலக்கணம் வழங்குகிறது. ஒரு பொது வரையறை நிறுமம் தான் வெளியிடும் பங்குகளையும் கடனீட்டு பத்திரங்களையும் வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஒரு ஆவணம் தகவலறிக்கை எனப்படும். பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதற்காக வெளியிடப்படும் விளம்பரம் தகவலறிக்கையாகவே கருதப்படும்.

2. பிடிப்பு, துணை நிறுமங்கள் பற்றி விளக்குக. [Sep. - 2020]

விடை : பிடிப்பு நிறுமங்கள் :

பிரிவு 2 (87) பிடிப்பு நிறுமம் என்பது, மற்றொரு நிறுமத்தின்.

(1) பெரும்பாண்மை இயக்குநர்களை நியமிக்கவும் அல்லது நீக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் நிறுமம்.

(2) நிறுமத்தின் மொத்தப் பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை வைத்திருக்கும் நிறுமம் பிடிப்பு நிறுமமாகும்.

(3) இவ்வாறு கட்டுப்படுத்தப்படும் வேறொரு நிறுமம் துணை நிறுமம் எனப்படும்.

(4) ஒரு பிடிப்பு நிறுமம் எத்தனை துணை நிறுமங்களை வேண்டுமானாலும் நிர்வகிக்கலாம்.

துணை நிறுமங்கள் :

துணை நிறுமம் என்பது,

1. நிறுமத்தின் மொத்த பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை மற்றொரு நிறுமம் வைத்திருந்தாலும்.
2. பெரும்பான்மை இயக்குனர்களை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தாலும் அவ்வாறு கட்டுப்படுத்தப்படும் நிறுமம் துணைநிறுமம் ஆகும்.

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1 மதிப்பெண்

1. பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்களின் குறைந்த அளவு எண்ணிக்கை ______.

அ. 5 ஆ. 6 இ. 7 ஈ. 15

[விடை. (இ) 7]

2. தனி வரையறு நிறுமத்தில் உறுப்பினர்களின் குறைந்த அளவு எண்ணிக்கை ______.

அ. 2 ஆ. 3 இ. 5 ஈ. 7

[விடை. (ஆ) 3]

3. கூட்டுப்பங்கு நிறுமத்தின் பதிவு ______.

அ. கட்டாயம் ஆ. கட்டாயமில்லை

இ. விருப்பத்தின் பேரில்

ஈ. இவற்றில் எதுவுமில்லை **[விடை. அ. கட்டாயம்]**

4. பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்களின் குறைந்த அளவு எண்ணிக்கை ______.

அ. 2 ஆ. 3 இ. 1 ஈ. 5

[விடை. ஆ. 3]

சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

1. தனி நிறுமம் என்றால் என்ன?

விடை : (i) தனி நிறுமம் என்பது நிறுமங்களில் ஒரு வகை. இந்நிறுமம் குறைந்தபட்சம் 2 பங்குதாரர்கள் மற்றும் 2 இயக்குநர்களைக் கொண்டு செயல்படலாம். குறைந்தபட்சத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட மூலதனம் ₹ 1,00,000/- என்பது நிறுமச்சட்டம் (திருத்தம்) 2015-இல் விதிக்கப்பட்டுள்ளது.

(ii) பத்திரங்களுக்காக அழைப்பு விடுப்பதையும் தடைசெய்கிறது. தற்பொழுது நிறுமத்தின் பங்குதாரர்களாக அதிகபட்சமாக 200 நபர்கள் வரை அனுமதிக்க நிறுமச்சட்டம் அனுமதி அளிக்கிறது.

(iii) ஒரு தனி நிறுமத்தை மூன்று முறைகளில் அமைக்கலாம். தனி நிறுமம், சிறிய தனி வரையறுக்கப்பட்ட நிறுமம், ஒரு நபர் தனி நிறுமம்.

☆ ☆ ☆

www.surabooks.com